620

பாரதி தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

V. நடராஜன், B. A., L. T.
Divisional Inspector of Schools, Coimbatore

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1949
MADRAS

...ங்கடராமன் கம்பெனி
: : கும்பகோணம்

[விலை 7 அணா

TB
031(3)
N49
137052

ஆரம்ப பாடசாலைகளுக்கான

புதிய

பாட திட்டம்

தாய்மொழி

மூன்றும் வகுப்பு — $7\frac{1}{2}$ வயது முதல் $8\frac{1}{2}$ வரை

I. வாய்மொழிப் பாடம்:—

(a) ஒரு சிறு தனிச் சம்பவத்தை ஆரம்பமுதல் முடிவுவரை கோர்வையாய்ச் சம்பந்தமுள்ளதை மட்டும் சேர்த்துச் (அனுவசிய விவரங்களை விலக்கிவிட்டு) சொல்லப் பழக்குதல்.

(b) சிறு நாடகங்களை நடித்தல்.

(c) சிறு செய்யுட்களை வாசித்தல், மனப்பாடம் செய்து ஒப்பித்தல்.

II. வாசிப்பு:—(a) பாட புத்தகங்கள் அல்லது தேர்ந்தெடுத்த பாடத் தொகுதிகள் மூலம் 500 புதிய வார்த்தைகள் கற்பித்தல்.

(b) மௌன வாசிப்பு:—மௌன வாசிப்பு 100-க்கு 60 பங்காக அதிகப்பட்டு, உரக்க வாசித்தல் 40 பங்கு மட்டுமேயாகும். வாய் விட்டு வாசித்தலைக் குறைத்து, மௌனமாகவும் வேகமாகவும் வாசிக்கப் பழக்கி, வாசித்த ஒவ்வொரு பாராவின் முக்கியக் கருத்தையும், கதைகளின் சராம்சத்தையும் தெளிவாக அறியும் படி செய்தல்.

III. எழுத்து:—புரியும்படியாகவும் அதிக வேகமாகவும் எழுதப் பழக்குதல். புரியும்படி வேகமாக எழுதுவதற்கும் பங்கமில்லாமல் எழுத்துக்களை அழகாயும் திருத்தமாயும் அமைப்பதற்கு ஆரம்பித்தல்.

படித்த தமிழ்ப் பாடத்திலும், வேறு பாடங்களிலும் கேட்கும் கேள்விகட்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் நீண்ட விடை எழுதப் பழக்குதல்.

IV. (a) இலக்கணத்தின் அடிப்படையான பிரதம விஷயங்கள்: பெயர்ச்சொல், வினைச்சொற்களைப் பொறுக்குதல்; ஒருமையா பன்மையா என்று சொல்லுதல். முற்றுப்புள்ளியின் உபயோகம்.

(b) ஏற்கனவே கற்றுள்ள எழுத்துக்களின் அகர வரிசை அறிதல்.

பாரதி தமிழ் வாசகம்

மூன்றாம் புத்தகம்

620
2-6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1949
MADRAS

V. நடராஜன் பி. ஏ., எல். டி.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

(Vide Page 7 (Part I) of the Consolidated list dated 24—5—49)

V. S. வெங்கடராமன் கம்பெனி

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது]

[விலை 7 அணா

T3
031(33)
N49

முன்னுரை

துரைத்தனத்தார் சமீப காலத்தில் வெளியிட்ட புதிய பாட திட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் தாய்மொழிப் போதனையின் நோக்கத்தையும் முறையையும் அனுசரித்து இப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாலர்களின் தினசரிப் பேச்சிலும் அநுபவத்திலும் விரவிவரும் சொற்களையும் விஷயங்களையும் கொண்ட பாடங்கள் மூலம் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மூவிதப் பயிற்சிகளும் இப் புத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. வாய்மொழிப் பயிற்சிக்குச் சாதகமாக நடித்துக்காட்டக் கூடிய கதைகள், சம்பாஷணைகள், குழந்தைப் பாட்டுகள், செய்தி சொல்லல் இவை அடங்கிய பாடங்களும் இதில் காணப்படும்.

பாலர்களுக்கு விளங்காத அரும்பதங்களை விலக்கி அவர்களது பேச்சுப் பழக்கத்திலுள்ள சொற்களைக்கொண்டே பாடங்கள் கொடுக்கப் பட்டுப் படிப்படியாக அதிகச் சொற்கள் கற்பிக்கப்படுகின்றன. இப் புத்தகத்தில் வந்துள்ள புதிய சொற்கள் சுமார் 550 ஆகும்.

தடுமாற்றமின்றி வாசிக்க இளைஞர்களைப் பழக்குவதற்குக் கீழ் வகுப்புக்களில் உரக்கப்படித்தல் அவசியமெனினும், காலக் கிரமத்தில் அவ் விதம் படிப்பதைக் குறைத்து, மௌன வாசிப்பை வற்புறுத்தல் புதிய திட்டத்தின் முக்கிய அம்சமாகும். மௌனப் படிப்பினால் பிள்ளைகள் பாடத்தில் கருத்தைச் செலுத்தி விஷயங்களைக் கிரகிக்க இயலும். இவ்வித மௌனப் படிப்பு இவ்வகுப்பில் நூற்றுக்கு அறுபது வீதமாகும்.

வாசிக்கும் வேகமும், எழுதும் வேகமும் நாளடைவில் அதிகரிக்கும் படி செய்வது மற்றும் ஓர் அம்சமாகும். இதுபற்றி கொடுத்த விஷயத்தைக் குறிப்பிட்ட நேரத்தில் வாசித்து முடிக்கவும் பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன.

அநுபவ முறையில் எழுதப்பட்டுள்ள இப் பாரதி மூன்ரும் வாசகம் மிக்க பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

V. நடராஜன்

சென்னை-600 008
137052

பொருளடக்கம்

பாடம்	விஷயம்		பக்கம்
1.	படம் படித்தல்	...	1
2.	படத்தைக் காட்டு	...	2
3.	படத்தைப்பற்றி எழுது	...	3
4.	வாக்கியம், சொல், எழுத்து	...	4
5.	சுந்தரம்	...	6
6.	நடித்தல் விளையாட்டு	...	8
7.	கமலம்	...	9
8.	வானம் விழுந்த கதை	...	11
9.	சரியா, தவறு ?		15
10.	பாலன் பிறந்த நாள்	...	16
11.	பாப்பா பாட்டு	...	18
12.	தினசரி சுகாதாரப் பழக்கம்	...	19
13.	எனது ஊர்	...	20
14.	எப்படி இருக்கும் ?	...	24
15.	வன தேவதையும் சின்னப் பெண்ணும்	...	26
16.	படித்துச் செய்	...	30
17.	பள்ளிக்கூடத் தோழர்கள்	...	31
18.	விசிறி செய்தல்	...	34
19.	பண்டிகைகள்	...	36
20.	படத்தைப் பார்த்துச் சொல்	...	39
21.	வண்ணாத்திப் பூச்சி	...	41
22.	வண்ணாத்திப் பூச்சி (பாட்டு)	...	44

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1949
MADRAS

பாடம்	விஷயம்		பக்கம்
23.	விடைக்கேற்ற கேள்வியைக் கண்டுபிடி	...	45
24.	தெனாலிராமன் கதை	...	47
25.	படித்தலும் எழுதலும்	..	51
26.	மகாத்மா காந்தி	...	54
27.	பாய் பின்னுதல்	...	58
28.	நிலாவோடு பேசுதல்	...	61
29.	பூனைக்கு யார் மணி கட்டுவது ?	...	62
30.	உசேன் அலியும் சுல்தானும்	...	64
31.	அவரைப் பாப்பா	...	67
32.	கால நிலைமை	...	68
33.	நான் யார் ?	...	70
34.	ஆஜர்ப் பட்டி	...	71
35.	பார்த்து நட !	...	72
36.	சைக்கிள் வண்டி	...	75
37.	பழைய பாடம் திருப்புதல்	...	76
38.	உல்லாசப் பிரயாணம்	...	79
39.	உலகநீதி	...	83
40.	ஆத்திசூடி	...	84

வனதேவதையும், சின்னப்பெண்ணும். [பக்கம் 26]

பாரதி தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

1. படம் படித்தல்

1. ஒரு பெண் இராட்டினத்தில் நூல் நூற்கிறாள்.

2. ஒரு பையன் பலகையால் பந்து அடிக்கிறான்.

3. இரண்டு குருவிகள் மரத்தில் உட்கார்ந்திருக்கின்றன.

4. மீன்கள் தண்ணீரில் நீந்துகின்றன.

5. தோட்டக்காரன் தண்ணீர் இறைக்கிறான்.

6. நாய் கூடையைக் கௌவிக்கொண்டிருக்கிறது.



2. படத்தைக் காட்டு

மனதுக்குள் படித்து, இவை ஒவ்வொன்றும் குறிக்கும் படத்தைக் காட்டு.

1. பறவைகள் பறக்கின்றன.
2. குதிரை வேகமாக ஓடுகிறது.
3. ரோஜாச் செடி பூத்திருக்கிறது.
4. பால்காரன் பால் கறக்கிருன்.
5. கமலம் ஊஞ்சல் ஆடுகிருள்.
6. பாலன் வளையம் சுற்றிக்கொண்டு ஓடுகிருன்.

பயிற்சி

கமலம் ஊஞ்சல் ஆடுகிருள்.

இந்த மூன்று சொற்கள் சேர்ந்து ஒரு வாக்கியம் ஆகிறது.
வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி இருப்பதைக் கவனி.
இந்தப் பாடத்தில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?
பாடத்தில் ஆருவது வாக்கியத்தில் எத்தனை சொற்கள் இருக்கின்றன?

3. படத்தைப்பற்றி எழுது

ஒவ்வொரு படத்தையும்பற்றி ஒரு வாக்கியம் எழுது.



4. வாக்கியம், சொல், எழுத்து

இந்த வாக்கியங்கள் ஒவ்வொன்றும் எந்தப் படத்தைக் குறிக்கின்றது? படத்தின் எண்ணை வாக்கியத்தின் அருகில் எழுது.

குடியானவன் கலப்பையினுல் வயலை உழுது சேருக்குகிருன்.

ஒருவன் பரம்புச் சட்டத்தினுல் நிலத்தைச் சமப்படுத்துகிருன்.

ஒருவன் நெல்விதைகளை வயலில் தெளிக்கிருன்.

ஒருத்தி நாற்று நடுகிருள்.

கதிர் முற்றிய பிறகு ஒருத்தி பயிரைத் தாளுடன் அறுக்கிருள்.

அரிந்த கற்றைகளைக் களத்தில் அடித்து நெல்லையும் வைக்கோலையும் ஒருவன் பிரிக்கிருன்.

பயிற்சி

ஒருவன் நெல் விதைகளை வயலில் தெளிக்கிறான்.

இந்த வாக்கியத்தில் 5 வார்த்தைகள் இருக்கின்றன. வார்த்தை, சொல் இரண்டும் ஒரே பொருளைத் தரும்.

ஒருவன் : இந்தச் சொல்லில் ஒ, ரு, வ, ன் என்ற 4 எழுத்துக்கள் இருக்கின்றன. எழுத்துக்கள் பல சேர்ந்து சொல் அல்லது வார்த்தை ஆகும்.

1. இந்தப் பாடத்தில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன ?

2. ஐந்தாவது வாக்கியத்தில் எத்தனை சொற்கள் இருக்கின்றன ?

3. 'தெளிக்கிறான்' : இந்தச் சொல்லில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன ?

4. இந்த வாக்கியங்களில் விட்ட சொற்களை எழுது :
   ஒருத்தி — நடுகிறாள்.
   குடியானவன் — வயலை — சேறுக்குகிறான்.

5. இந்த வார்த்தைகளில் விட்ட எழுத்துக்களை எழுது :
   வைக் — ல்
   அறுக்கி — ள்
   பர — புச் ச — — ம்

5. சுந்தரம்

1. இந்தப் பையன் பெயர் சுந்தரம். இவன் தகப்பனார் பெயர் நடேச முதலியார்.

இவன் பிறந்த ஊர் சீர்காழி.

இவன் விலாசம் (வசிக்கும் இடம்):—

16, வடக்குத் தெரு, சீர்காழி.

2. சுந்தரத்துக்கு ஒரு அண்ணனும், இரண்டு தங்கைகளும் உண்டு. இவனுடைய பாட்டனாரும் பாட்டியும் அதே குடும்பத்தில் இருக்கிறார்கள். இவர்கள் சொந்த வீட்டில் வசிக்கிறார்கள்.

3. இவன் தகப்பனார் கிராம முன்சீப். அவருக்கு நிலமும் தோட்டமும் உண்டு. அவைகளை அவர் பயிர்செய்துவருகிறார். சுந்தரம் பாடசாலையில் மூன்றாவது வகுப்பில் படிக்கிறான் இவன் உபாத்தியாயர் பெயர் கந்தசாமிப் பிள்ளை.

4. சுந்தரம் சுறுசுறுப்பு உள்ள பையன். அவன் தனது உடலையும் உடையையும் சுத்தமாக வைத்துக்கொள்வான். படிக்கும்போது கவனமாகப் பாடங்களைப் படிப்பான். சின்னத் தங்கை ஐயாவுக்குக் கதை சொல்லுவான்.

5. இவனுக்கு ஓடி விளையாடுவதில் ஆசை அதிகம். சுந்தரம் எப்பொழுதும் உண்மையே பேசுவான். எடுத்த காரியத்தைத் தயங்காமல் செய்து முடிப்பான். பிறர் பொருளுக்கு ஆசைப் படுவதில்லை. சுந்தரத்தை ஒரு சிறு வீரன் என்று சொல்லலாம்.

பயிற்சி

1. பூர்த்தி செய்:

குறிப்புக்கள்	
உன் பெயர்...	வயது............
தகப்பனர் பெயர்............	
அவர் தொழில்...	
வீட்டு விலாசம்	
பாடசாலை....................	வகுப்பு...........
உபாத்தியாயர்................	

2. இதே விதம் கற்பலகையில் கோடு போட்டு, சுந்தரத்தைப்பற்றிக் குறிப்புக்கள் எழுது.

3. சுந்தரத்துடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்?

4. சுந்தரத்தை ஏன் ஒரு சிறு வீரன் என்று சொல்லலாம்?

5. விலாசத்தில் '16'—எதைக் குறிக்கும்?

6. நடித்தல் விளையாட்டு

மனதுக்குள் படி. பிறகு நடித்துக் காட்டு.

1. டம்ளரிலிருந்து தண்ணீர் குடிப்பது போல.

2. தரையைப் பெருக்குவதுபோல.

3. பென்சிலைக் கீழே போட்டு எடுப்பது போல.

4. தயிர் கடைவதுபோல.

5. கைகளைச் சோப்பினால் கழுவுவதுபோல.

6. எழும்பிக் குதித்துக் குதித்து உறியை எட்டிப் பிடிப்பதுபோல.

7. கிணற்று ராட்டினத்தில் தண்ணீர் இழுப்பதுபோல.

8. புத்தகத்தை உயர எட்டி வைப்பது போல.

9. 'மிட்டாய் தா' என்று கெஞ்சுவதுபோல.

10. அம்மியில் அரைப்பதுபோல.

11. துணி துவைப்பதுபோல.

12. காலால் பந்தை உதைப்பதுபோல.

7. கமலம்

1. இந்தப் பெண் பெயர் கமலம். இவள் தாயார் பெயர் காந்திமதி. கமலத்திற்கு இரண்டு அக்காளும் ஒரு தம்பியும் உண்டு. இவர்களிடத்தில் கமலத்தின் தகப்பனார் அன்பாக இருக்கிறார்.

2. கமலம் அதிகாலையில் எழுந்து தாய்க்கு உதவிசெய்வாள். பாத்திரம் பண்டங்களைச் சுத்தமாக விளக்கிவைப்பாள். அவள் தம்பியின் பெயர் பாலன். அவன் கைக்குழந்தை. பாலனுக்கு அவள் விளையாட்டுக் காட்டுவாள்; தொட்டில் ஆட்டுவாள்; குழந்தைப் பாட்டுக்கள் பாடுவாள். கமலத்தின் தாயார் அவளுக்குத் தலை வாரிப் பின்னி, பூச் சூட்டுவாள்.

3. கமலம் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போவாள். கருத்துடன் பாடங்களைப் படிப்பாள். கோலம் போடுவதிலும், தையல் வேலையிலும் கமலத்துக்கு அதிக ஆசை.

4. சிரித்த முகத்துடன் கமலம் எல்லோரிடத்திலும் மரியாதையாகப் பழகுவாள். எல்லோரும் அவளிடத்தில் பிரியமாயிருப்பார்கள்.

பயிற்சி

1. *கமலத்தின் விலாசம்:*

செல்வி, கமலம்,
மூன்றாவது வகுப்பு,
சரசுவதி பாடசாலை,
சிதம்பரம்.

இதேவிதம் உன் விலாசத்தைக் கட்டம் போட்டு எழுது.

2. கமலம் தாய்க்கு எவ்விதங்களில் உதவிசெய்வாள்? அந்த வாக்கியங்களைப் பாடத்திலிருந்து எடுத்து எழுது.

3. பாலனுக்குக் கமலம் என்ன செய்வாள்?

4. ஏன் எல்லோரும் கமலத்தினிடம் பிரியமாக இருப்பார்கள்?

5. இந்த வார்த்தைகளைத் தக்க இடங்களில் எழுதி வாசி:

மகன் — மகள்   தம்பி — தங்கை

சுந்தரம் நடேச முதலியாரின் ——.

கமலம் காந்திமதியின் ——.

பாலன் கமலத்தின் ——.

ஐயா சுந்தரத்தின் ——.

8. வானம் விழுந்த கதை

ஒரு நாள் ஒரு கோழிக்குஞ்சு வெளியே உலா

வப்போயிற்று. வழியில் ஒரு ஆலமரம் இருந்தது. அதிலிருந்து ஒரு ஆலம்பழம் கோழிக்குஞ்சின் தலைமேல் விழுந்தது. உடனே கோழிக்குஞ்சு பயந்து கத்திற்று. வானமே தன் தலையில் விழுந்துவிட்டது என்று நினைத்து அது நடுங்கிற்று. திரும்பிப் பார்க்காமல் அது ஓடிற்று.

எதிரில் தாய்க்கோழி வந்தது. "அம்மா! வானம் விழுந்துவிட்டது!" என்று கோழிக்குஞ்சு சொல்லிற்று. "ஐயோ! ராஜாவிடம் போய்ச் சொல்லுவோம்; வா." என்று தாய்க்கோழி சொன்னது. இரண்டும் வேகமாக நடந்தன.

வழியில் ஒரு சேவல் நின்றுகொண்டிருந்தது.

"ஐயா சேவலாரே! சங்கதி கேட்டீரா?" என்று தாய்க்கோழி கேட்டது. "என்ன சங்கதி? எனக்குத் தெரியாதே" என்று சேவல் பதில் சொன்னது. "கோழிக்குஞ்சின் தலையில் வானம் விழுந்துவிட்டதாம். ராஜாவிடம்சொல்லப் போகிறோம். நீயும் எங்களுடன் வா" என்று தாய்க்கோழி கூப்பிட்டது. மூன்றும் வேகமாக நடந்தன.

போகும்போது வழியில் அவை ஒரு வாத்தைச்



சந்தித்தன. இவ்வளவு வேகமாக எங்கே போகிறீர்கள்?" என்று வாத்து கேட்டது. "கோழிக்குஞ்சின் தலையில் வானம் விழுந்தாம். தாய்க்கோழியிடம் கோழிக்குஞ்சு சொன்னது. என்னிடம் தாய்க்கோழி சொல்லிற்று. நாங்கள் ராஜாவிடம் சொல்லப்போகிறோம். நீயும் எங்களுடன் வருகிறாயா?" என்று சேவல் கேட்டது. "சரி, நானும் வருகிறேன்" என்று வாத்தும் அவைகளுடன் சேர்ந்துகொண்டது.

கோழிக்குஞ்சு, கோழி, சேவல், வாத்து இவை நான்கும் வேகமாக நடந்தன. எதிரே ஒரு நாய் வந்தது. "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று நாய் கேட்டது. "கோழிக்குஞ்சின் தலையில் வானம் விழுந்ததாம். கோழிக்குஞ்சு தாய்க்கோழி

யிடம் சொல்லிற்று. தாய்க்கோழி சேவலிடம் சொன்னது. சேவல் என்னிடம் சொன்னது. நாங்கள் எல்லோரும் ராஜாவிடம் சொல்லப் போகிறோம்" என்று வாத்து சொன்னது.

"கோழிக்குஞ்சின் தலையில் விழுந்த வானம் எங்கே?" என்று நாய் கேட்டது.

வாத்து :—எனக்குத் தெரியாது.

சேவல்:—எனக்குத் தெரியாது.

கோழி :—எனக்குத் தெரியாது.

எல்லாம் கோழிக்குஞ்சைப் பார்த்தன.

கோழிக்குஞ்சு: வானம் என் தலையில் விழுந்தது. தலையில் பட்டுக் கீழே விழுந்திருக்கும். நான் திரும்பிப் பார்க்கவில்லை; ஓடி வந்து விட்டேன்.

கோழி :—விழுந்த இடத்திலேயே வானம் கிடக்கும். போய்ப் பார்க்கலாம், வாருங்கள்.

நாய் :—வானம் எப்படியிருக்கும்? நானும் பார்த்ததில்லை. கீழே விழுந்த வானம் அங்கேயே இருக்குமா? அதை யாராவது எடுத்துப் போயிருப்பார்களே. எதற்கும் போய்த் தேடிப் பார்க்கலாம்; வாருங்கள்.

ஐந்தும் திரும்பி ஆலமரத்தின் அருகில் வந்தன. அப்போது ஒரு ஆலம்பழம் விழுந்தது. அது கோழிக்குஞ்சின் தலையில் விழுந்து கீழே உருண்டு ஓடியது. "ஐயோ! இன்னொரு வானம் என் தலையில் விழுந்தது" என்று கோழிக் குஞ்சு பயந்து அலறியது. "வானம் எங்கே? எங்கே வானம்?" என்று எல்லாம் கூச்சலிட்டுக் கொண்டு ஓடிவந்தன. கோழிக்குஞ்சு தலையில் ஆலம்பழம் விழுந்ததை நாய் பார்த்தது. தரையில்

விழுந்த வானத்தைக் கோழியும் வாத்தும் தேடு வதைப் பார்த்து அது சிரித்தது. "இதோ பார். உன் தலையில் விழுந்தது இந்த ஆலம்பழம்தான்!". என்று நாய் காட்டினது. கோழிக்குஞ்சு வெட்கப் பட்டு நின்றது. கோழி அப்பழத்தைக் காலால் தள்ளியது. சேவல் அப்பழத்தை மூக்கினல் கொத்தியது. "உயரப் பார், வானம்! பூமியில் பார், பழம்! குவாக்! குவாக்!" என்று கூவிக் கொண்டு குதித்தது வாத்து.

பயிற்சி

1. கேள்விகள் :

1. நீங்கள் ஐந்து பேர்கள் இந்தக் கதையை நடித்துக் காட்டவும்.

2. இந்தக் கதையை உன் தம்பிக்குச் சொல்.

3. கோழிக்குஞ்சு ஏன் பயந்தது?

4. கோழிக்குஞ்சு கடைசியில் ஏன் வெட்கம் அடைந்தது?

5. இந்தக் கதை உண்மையாயிருக்குமா? காரணத்துடன் சொல்.

2. ஒரு கருத்தைச் சொல்வது ஒரு வாக்கியம். வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி வைக்கவேண்டும். இப்புள்ளிக்கு **முற்றுப்புள்ளி** என்று பெயர்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் முற்றுப் புள்ளி வை:

ஒரு நாள் ஒரு கோழிக்குஞ்சு வெளியே உலாவப் போயிற்று வழியில் ஒரு ஆலமரம் இருந்தது அதிலிருந்து ஒரு ஆலம்பழம் கோழிக்குஞ்சின் தலைமேல் விழுந்தது உடனே கோழிக்குஞ்சு பயந்து கூச்சல் போட்டது.

9. சரியா, தவறு?

படித்து, தவறானவைகளுக்கு எதிராக இந்த × அடையாளமும், சரியானவைகளுக்கு எதிரில் இந்த √ அடையாளமும் செய்.

1. உப்பு தண்ணீரில் கரையும்.

2. குதிரைக் குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.

3. தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடும்.

4. இருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது குறுக்கே பேசுவது மரியாதை இல்லை.

5. தெருக்களில் வாழைப்பழத் தோல்களை விட்டெறிதல் கூடாது.

6. பிறர் துணியைக் கட்டிக்கொள்வது நல்லது.

7. காகத்திற்குச் சாதம் போடுதல் வேண்டும்.

8. கூட்டத்தில் பிறரை இடித்துத் தள்ளுதல் வேண்டும்.

பயிற்சி

வா, போ, ஈ, தா—இவை ஓரெழுத்துச் சொற்கள்.

நில், நட, கண், நரி—இவை இரண்டெழுத்துச் சொற்கள்.

இவ்விதம் சொற்களில் ஒன்று அல்லது பல எழுத்துக்கள் சேர்ந்திருக்கும்.

1. மூன்றெழுத்துச் சொற்கள் மூன்று எழுது.
2. நான்கெழுத்துச் சொற்கள் மூன்று எழுது.
3. இந்த எழுத்துக்களைச் சொற்களாக எழுது :—
   ழைவா, ரைதிகு, புஉப், ண்ணீதர்.



10. பாலன் பிறந்த நாள்

1. பாலன் ஒரு சிறு குழந்தை. அவனுக்கு இப்பொழுது ஒரு வயது ஆகிறது. இன்றைய தினம் அவன் பிறந்த நாள். அவன் தாயும் தந்தையும் இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். வீட்டை மெழுகிக் கோலமிட்டு, வாசலில் மாவிலை கட்டி அலங்காரஞ் செய்தார்கள். இன்று கமலம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

2. காலையில் வீட்டில் கொட்டுமேளம் கொட்டியது. ஊர்ப் பிள்ளைகள் எல்லோரும் வந்து கூடினார்கள். மாமன், மாமி, அத்தை, அத்தான் முதலிய உறவினர்கள் வந்தார்கள். ஊரிலுள்ள பெரியோர்களும் வந்திருந்தார்கள். மத்தியானம் விருந்து நடந்தது. அதில் சாதம், கறி, பருப்பு பலகாரம், வடை, பாயசம், பழங்கள் முதலியன இலையில் இட்டார்கள். எல்லோரும் உண்டு மகிழ்ந்தார்கள்.

3. சாப்பாட்டிற்குப் பிறகு குழந்தைக்குக் காது குத்தினார்கள். அப்போது பாலனுடைய மாமா ஒரு வெள்ளிக் கிண்ணமும், ஒரு பட்டுத்

துண்டும் அவனுக்குக் கொடுத்தார். மற்றும் வந்தவர்கள் பட்டுச் சொக்காய், பட்டுக் குல்லாய், பலவிதப் பொம்மைகள் முதலியவைகளைக் கொடுத்தார்கள். பெற்றோர்கள் தங்கச் சங்கிலியும் காப்பும் செய்து குழந்தைக்குப் போட்டார்கள்.

4. மாலையில் ஊர்வலம் நடந்தது. குழந்தையை மோட்டார் வண்டியில் வைத்து, கொட்டு மேளத்துடன் ஊரைச் சுற்றி வந்தார்கள். எல்லோரும் குழந்தையை வாழ்த்திச் சென்றார்கள்.

பயிற்சி

பல வாக்கியங்கள் சேர்ந்து ஒரு **பத்தி** அல்லது **பாரா** ஆகும்.

1. இப் பாடத்தில் எத்தனை பாராக்கள் இருக்கின்றன?

2. இப் பாடத்தில் பெரிய பாரா எது?

3. கடைசிப் பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?

4. (i) **ஊர்வலம்:** இந்த வார்த்தை எந்தப் பாராவில் வந்திருக்கிறது? ஊர்வலம் எந்த வண்டியில் நடந்தது?

(ii) **விருந்து:** இந்த வார்த்தை எந்தப் பாரர்வில் வந்திருக்கிறது? விருந்தில் என்ன என்ன சாப்பிட்டார்கள்?

(iii) **மாவிலை:** இந்த வார்த்தை எந்தப் பாராவில் இருக்கிறது? மாவிலைகொண்டு என்ன செய்தார்கள்?

11. பாப்பா பாட்டு



1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

3. வண்டியிழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

பயிற்சி

1. இந்தப் பாட்டுக்களை மனப்பாடம் செய்.

2. இந்தப் பாட்டுக்களில் சொல்லப்பட்ட நான்கு மிருகங்களை எடுத்து எழுது. ஒவ்வொன்றைப்பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

12. தினசரி சுகாதாரப் பழக்கம்

இந்த அட்டவணையைப் படி. நீ செய்யாத காரியங்களின் எதிராக இந்த × அடையாளம் செய்.

1. இன்று நீ அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்தாயா?
2. உடனே வெளியே சென்று மலஜலம் கழித்தாயா?
3. பல் விளக்கி முகம் கழுவினாயா?
4. உடல் குளித்தாயா?
5. உனது துணிகளைத் துவைத்தாயா?
6. நகங்கள் சுத்தமாக இருக்கின்றனவா?
7. நேற்று இரவு பால் குடித்தாயா?
8. பழங்கள் சாப்பிட்டாயா?
9. உணவை நன்றாக மென்று புசித்தாயா?
10. நிமிர்ந்து உட்கார்ந்தாயா?
11. நேற்று விளையாடினாயா?
12. உனது புத்தகங்களையும் சாமான்களையும் ஒழுங்குசெய்து வைத்தாயா?

பயிற்சி

1. ஒவ்வொரு நாளும் இவ்வித சுகாதாரப் பரீட்சை செய்து வா.

2. ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இருக்கும். கேள்வி வாக்கியத்தின் முடிவில் கேள்விக் குறி இருக்கும். கேள்விக் குறி **?** இப்படிப் போடவேண்டும்.



14. எனது ஊர்

1. நான் பிறந்த ஊர் ஒரு பெரிய கிராமம். அதில் சுமார் ஐந்நூறு வீடுகள் உண்டு. ஊருக்கு வடக்கில் ஒரு சிறு ஆறு ஓடுகிறது; தெற்கில் ரயில் பாதை ஒன்று இருக்கிறது.

2. கிராமத்தின் நடுவில் ஒரு பெரிய கோவில் உண்டு. அதைச் சுற்றிலும் நான்கு பெரிய இரத வீதிகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர, சிறு தெருக்களும், சந்துகளும் உண்டு. பெரிய தெருக்களில், அநேக வீடுகள் ஓட்டுக் கட்டடங்கள்; சில, மாடி வீடுகள். சிறு தெருக்களில் பல கூரை வீடுகளும், இடையிடையே சில குடிசைகளும் இருக்கின்றன.

3. கிராமத்தில் அவரவர்கள் வீடுகளைத் தவிர சில பொது இடங்களும் உண்டு. கிராமக் கோவில்

ஒரு பொது இடம். கிராமத்து மக்கள் எல்லோரும் கோவிலுக்குப் போவார்கள். எல்லோரும் ஒற்றுமையாகத் திருவிழாக்கள் நடத்துவார்கள். பஜனை மடம், கிராமச் சாவடி, கிராமப் பள்ளிக்கூடம், தபாலாபீசு இவைகளும் பொது இடங்களே. வழிப்போக்கர்கள் வந்தால் அவர்கள் பஜனை மடம் அல்லது கிராமச் சாவடியில் தங்குவார்கள்.

4 கோவிலுக்கு எதிரில் ஒரு சிறு கடைத்தெரு உண்டு. அதில் பலசரக்குக் கடை, ஜவுளிக்கடை, பலகாரக் கடை முதலிய பல கடைகள் இருக்கின்றன. இவைகளில் கிராமத்தாருக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைக்கும்.

5. ஊரின் கிழக்கிலும், மேற்கிலும் பெரிய குளங்கள் இருக்கின்றன. ஒரு குளம் குடிதண்ணீர்க்குளம். இந்தக் குளத்தில் தாமரையும் அல்லியும் படர்ந்து பூத்திருக்கின்றன. இதில் குளிக்கவும் கூடாது; துணிகள் துவைக்கவும் கூடாது. ஆடுமாடுகள் குளிப்பாட்டத் தனியாகச் சிறு குளங்கள் உண்டு. சில தெருக்களில் கைப்பிடிச் சுவர் கட்டிய பொதுக்கிணறுகளும் இருக்கின்றன. ஊரைச்சுற்றித் தோப்புக்களும், தோட்டங்களும், வயல்களும் இருக்கின்றன.

6. வரி வசூல் செய்யக் கிராம முன்சிப்பும், நிலங்களை அளந்து கட்டிச் சாகுபடிக் கணக்குகள் தயாரிக்கக் கணக்குப்பிள்ளையும் கிராமத்தில்

முக்கிய அதிகாரிகள் ஆவர். கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான சிறு வழக்குகளையும், சண்டை, களவு முதலிய சிறு குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்யக் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. கிராமச் சுகாதாரம் முதலிய பொது நலக் காரியங்களைக் கவனிக்கப் பஞ்சாயத்து போர்டு என்னும் ஒரு சபையும் இருக்கிறது.

7. கிராம வாழ்க்கையே சுகமானது. கிராமத்தில் சுத்தமான காற்றும், நல்ல தண்ணீரும் உண்டு. தயிர், பால், காய்கறிகள் இவைகள் எல்லாம் மலிவாகக் கிடைக்கும். நான் பிறந்த ஊர் எனக்கு அருமையானது. நான் பெரியவனான பின்பு, என் ஊராருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வேன்.

"ஊருடன் கூடி வாழ்."

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்."

பயிற்சி

1. கேள்விகள்:

1. கிராமத்திலுள்ள பொதுக் கட்டடங்கள் எவை?

2. கிராம வாழ்க்கை எவ்விதங்களில் நல்லது?

3. இந்தக் கிராமத்தில் எத்தனைவித வீடுகள் இருக்கின்றன?

4. 'பொது இடங்கள்' எந்தப் பாராவில் விவரிக்கப்படுகிறது என்று சொல்.

5. நாலாவது பாரா எதைப்பற்றிச் சொல்லுகிறது?

6. கிராமப் படத்தை இரண்டு நிமிஷம் உற்றுப் பார். புத்தகத்தை மூடிவிட்டு, படத்திலுள்ள சொற்களை எழுது. குளம்—எத்தனை உண்டு?

2. உன் ஊரைப்பற்றி அடியிற் கேட்டுள்ள விவரங்களை எழுது:

1. உன் ஊரில் ஆறு உண்டா? அதன் பெயர் என்ன?

2. உன் ஊரில் என்ன என்ன பொதுக் கட்டடங்கள் இருக்கின்றன?

3. உன் ஊரில் என்ன என்ன கடைகள் இருக்கின்றன?

4. உன் ஊருக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் எவ்வளவு தூரம்?

5. உன் ஊரில் பஞ்சாயத்துச் சபை இருக்கிறதா?

3. பின்வரும் சொற்களைக் கவனி:

பள்ளிக்கூடம் — ஓர் இடத்தின் பெயர்.
தஞ்சாவூர் — ஓர் ஊரின் பெயர்.
கோபாலன் — ஒரு பையனின் பெயர்.
வள்ளி — ஒரு பெண்ணின் பெயர்.
பெட்டி — ஒரு பொருளின் பெயர்.

இந்தச் சொற்கள் எல்லாம் பெயர்களைக் குறிப்பதால் **பெயர்ச் சொற்கள்.**

இந்தப் பாடத்தில் முதல் பாராவிலுள்ள **பெயர்ச்சொற்களைப்** பொறுக்கி எழுது.

14. எப்படி இருக்கும்?

1. நெருப்பைத் தொட்டால் எப்படி இருக்கும்?
2. பானைத் தண்ணீரைத் தொட்டால் எப்படி இருக்கும்?
3. சர்க்கரையைத் தின்றால் எப்படி இருக்கும்?
4. மிளகைக் கடித்தால் எப்படி இருக்கும்?
5. இரும்புக் கட்டியைத் தூக்கினால் எப்படி இருக்கும்?
6. கொஞ்சம் பஞ்சைத் தூக்கினால் எப்படி இருக்கும்?
7. கண்ணாடியின்மேல் கையால் தடவினால் எப்படி இருக்கும்?
8. பனைமரத்தைக் கையால் தடவினால் எப்படி இருக்கும்?
9. அதிக நேரம் சாப்பிடாவிட்டால் எப்படி இருக்கும்?
10. அதிக நேரம் தண்ணீர் குடிக்காவிட்டால் எப்படி இருக்கும்?

மேலுள்ள கேள்விகளுக்குச் சரியான விடைச்சொற்களைக் கண்டுபிடி. அதற்குப் பக்கத்தில் கேள்வியின் எண்ணைக் குறி.

கனமாய்	குளிர்ச்சியாய்	வழவழப்பாய்
தாகமாய்	இனிப்பாய்	உறைப்பாய்
சூடாய்	பசியாய்	சொரசொரப்பாய்
இலேசாய்		

பயிற்சி

1. தெரிந்துகொள்:



பெரிய பந்து	சிறிய பந்து
உயரமான மரம்	குட்டையான மரம்
உயரமான மனிதன்	குள்ளமான மனிதன்
தடித்த நூல்	மெல்லிய நூல்
மேடான வயல்	பள்ளமான வயல்
அகலமான ஆறு	குறுகலான ஆறு

2. எது சுடும்? நெருப்பு.

எது இலேசாய் இருக்கும்? பஞ்சு.

இதே விதம் நான்கு கேள்விகளும், விடைகளும் எழுது.

15. வனதேவதையும் சின்னப் பெண்ணும்

முன்னொரு காலத்தில் காட்டுக்கு அருகி லுள்ள ஓர் ஊரில் ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் சின்னப் பெண். அவளுக்கு அம்மாவும் இல்லை; அப்பாவும் இல்லை; வீடும் இல்லை. தோப் புக்களிலேயே தனியாக அலைந்து திரிவாள். அவ ளுக்கு இரக்கப்பட்டு அநேகர் உணவு கொடுப்பார் கள். அவள் அதைச் சாப்பிட்டுக் காலங்கழித்தாள்.

ஒரு நாள் காட்டில் வழி தெரியாமல் திகைத் தாள். பசியினால் ஓரிடத்தில் உட்கார்ந்து கண்ணீர் விட்டு அழுதாள். ஐயோ! பாவம். அப்பொழுது, 'ஏன் அம்மா! அழுகிறாய்?' என்று ஒரு சிறு குரல் கேட்டது. சின்னப் பெண் தலை நிமிர்ந்து பார்த் தாள். அந்தக் காட்டிலுள்ள தேவதை அவள் கண்முன் நின்றாள். சின்னப் பெண் ஆச்சரியத் துடன், 'நீங்கள் யார்?, என்று கேட்டாள்.

வனதேவதை:— நான் இந்த வனத்திற்கு எல்லாம் அதிகாரியான தேவதை. நீ ஏன் அழுகிறாய்? சொல்.

சின்னப் பெண்:— வன ராணியே! வழி தெரியாமல் திகைக்கிறேன். எனக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; வீடுமில்லை. நான் ஓர் அனாதை.

வனதேவதை :— அறியாக் குழந்தையே! அழாதே. இதோ! இந்த அழகிய பொம்மைப் புத்த கத்தைப் பார்.

உடனே வனதேவதை ஒரு பெரிய புத்தகத்தைத் திறந்து, அதிலுள்ள படங்களைச் சின்னப் பெண்ணுக்குக் காட்டினாள். அந்த அதிசயமான புத்தகத்தில் உண்ணக்கூடிய பல இனிய பொருள்களையும், உடுக்கக்கூடிய அழகான ஆடைகளையும், சுகமான வீடுகளையும் காட்டும் அருமையான பல படங்கள் இருந்தன.

சின்னப் பெண் :— ஆகா, என்ன அதிசயமான புத்தகம் !

வனதேவதை:— அப்படியா ! சந்தோஷம். அதை நீயே எடுத்துக்கொள்.

சீ. பெ. :—வந்தனம், வந்தனம். இந்த புத்தகத்திலுள்ள படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் எனக்கு ஒருபொழுதும் வருத்தமே இராது.

வ. தே. :—விரும்பியதைக் கொடுக்கும் விசித்திரமான புத்தகம் இது. உனக்கு ஏதாவது வேண்டுமானல் இந்தப் புத்தகத்தைத் திற. உனக்கு வேண்டிய பொருளின் படத்தைத் தொடு. என்னை நினைத்துக்கொண்டு, 'வனராணியே ! நான் விரும்புவதைத் தா' என்று வேண்டிக்கொள்.

சின்னப்பெண் வந்தனம் சொல்வதற்குள் வனதேவதை மறைந்துபோய்விட்டாள்.

'இது உண்மையாக இருக்குமா, பார்க்கிறேன்' என்று சொல்லி, சின்னப் பெண் புத்தகத்தைத் திறந்தாள். உணவுப் படத்தைப் பார்த்துக் கொண்டு 'வனராணியே, வனராணியே! அறு சுவை ஆகாரம் தா' என்று வேண்டினள்.

ஆகா! என்ன அதிசயம்! அன்னம், பருப்பு, பாயசம், பட்சணம், பழம் இவைகள் நிரம்பிய தங்கத் தட்டு ஒன்று அவள் எதிரில் வந்து நின்றது.

உடனே 'இதுவரையில் இம்மாதிரிச் சாப்பாடு கண்டதில்லையே' என்று சொல்லி, சின்னப் பெண் அவைகளை அதிக ஆவலோடு சாப்பிட்டாள்.

சாப்பிட்டவுடன், 'எனக்கு ஆடையாபரணம் வேண்டாமா?' என்று நினைத்தாள். உடனே ஆடையாபரணம் எழுதிய பக்கத்தைப் புரட்டி எடுத்துக்கொண்டு, 'வன ராணியே. வனராணியே! ஆடையாபரணம் தா' என்று வேண்டினள். அந்த நிமிஷமே சின்னப் பெண் விதவிதமான நகைகளுடனும் பட்டாடையுடனும் விளங்கினள்.

இவைகள் கிடைத்தவுடன் 'வசிக்க வீடும், சிங்காரத் தோட்டமும் வேண்டும்' என்று எண்ணினள். புத்தகத்தைத் திறந்து, வீட்டுப் படத்தைத் தொட்டாள். 'வனராணியே, வனராணியே! வீடும் தோட்டமும் தா' என்று வேண்டிக்கொண்டாள். அவளுக்கு எதிரில் ஆகா, என்ன சுகமான வீடு! என்ன சிங்காரமான தோட்டம்!

சின்னப் பெண் அந்த மாளிகையில் நுழைந்தாள். வீட்டிற்கு வேண்டியன எல்லாம் அங்கே இருந்தன. சின்னப் பெண் அந்த மாளிகையிலேயே வெகு காலம் மகிழ்ச்சியுடன் வசித்து வந்தாள். தன் வீட்டுக்கு வந்த ஏழைகளையும், மிருகங்களையும், பட்சிகளையும் அன்போடு அவள் ஆதரித்து வந்ததால், அவள் தனியாக இருக்கவில்லை.

பயிற்சி

1. விசித்திரமான-இந்த வார்த்தை வரும் வாக்கியத்தைத் தேடி வாசி. விசித்திரமான பொருள் எது?

2. அதிசயம்-இந்த வார்த்தையைச் சொல்வது யார்?

3. அனதை-இந்த வார்த்தையை யார் சொன்னாள்? யாரிடம் சொன்னாள்?

4. விசித்திரமான, அதிசயம், அனதை—இந்த வார்த்தைகளை வைத்து வாக்கியங்கள் எழுது.

5. தெரிந்துகொள்:

ஒன்று	பல	ஒன்று	பல
பெண்	பெண்கள்	நான்,	நாம், நாங்கள்
புத்தகம்	புத்தகங்கள்	நீ,	நீர், நீங்கள்
வனம்	வனங்கள்	அது	அவை
கல்	கற்கள்	அவன், அவள்	அவர்கள்
பல்	பற்கள்		

16. படித்துச் செய்

படித்துச் செய்:

நில். மெதுவாக நட.

கை வீசி வேகமாக நட. ஓடு.

கையைத் தூக்கிக்கொண்டு குதிகாலால் நட.

கையை இடுப்பில் வைத்துக்கொண்டு கட்டை விரலால் நட.

குதித்துக் குதித்து ஓடு.

ஒற்றைக் காலால் நொண்டி ஓடு.

நில். உன் இடத்திற்குப் போ.

கை தட்டு. சலாம் செய். உட்கார்.

பயிற்சி

நில், நட, ஓடு, தூக்கு, உட்கார், போ—இந்தச் சொற்கள் செய்கைகளைக் குறிக்கின்றன, செயலைக் குறிக்கும் சொல் **வினைச் சொல்** எனப்படும். (வினை - தொழில், செய்கை.)

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களை எழுது:

1. இராமன் மரத்தை வெட்டுகிறான்.
2. கமலம் நூல் நூற்கிறாள்.
3. கோபாலன் கரும்பு தின்கிறான்.

17. பள்ளிக்கூடத் தோழர்கள்

சுவாமிநாதன்:— மணி ! நீ பெரியவன் ஆனதும் என்ன வேலை பார்க்க உனக்கு ஆசை ?

மணி:— என் தகப்பனரைப் போல் பயிர்வேலை பார்க்கத்தான் ஆசை.

சுவாமிநாதன்:— பயிர்த் தொழில் மிகக் கடினமான வேலையல்லவா ?

மணி: கடினமான வேலைதான். ஆனால் பிறருக்குக் கைகட்டிச் சேவிக்கவேண்டியதில்லையே ? மேலும்,பயிர்த்தொழில்தான் நமது நாட்டுக்கு உயிர்த் தொழில். அதனால்தான் நமக்கு உணவு கிடைத்து நாம் பிழைத்திருக்கிறோம். நீ என்ன தொழில் செய்யப்போகிறாய் ?

சுவாமிநாதன்:— தச்சு வேலையில் பழகி, நாற்காலி, மேசை, பெட்டி, அலமாரி இவைகள் செய்ய எனக்கு ஆசை. இரத்தினம் ! என்ன வேலை பார்க்க உனக்கு விருப்பம் ?

இரத்தினம்:— என் தகப்பனர் துணி நெய்கிறார். நானும் அதையேதான் செய்யப்போகிறேன். நமக்கு ஆடை தேவையல்லவா? துரைராஜ்! உனது விருப்பத்தைச் சொல்.

துரைராஜ்:— நான் படித்து, டாக்டராக வர எனக்கு ஆசை.

சுந்தரம்:— நான் படித்து, வக்கிலாகப் போகிறேன்.

இரத்தினம்:— வக்கிலுக்கும், டாக்டருக்கும் படிக்க அதிகப் பணம் செலவாகுமே?

சுந்தரம்:— என் தகப்பனர் அதற்கு வேண்டிய பணம் தருவதாகச் சொல்லியிருக்கிருர். துரைராஜ்! டாக்டர் வேலை அருவருப்பானது அல்லவா? எப்பொழுதும் நோயாளிகளுடன் பழகவேண்டுமே?

துரைராஜ்:— வியாதியினல் வருந்துகிறவர்களுக்கு மருந்து கொடுத்துச் சுகப்படுத்துவது ஒரு மேன்மையான தொழில். மேலும், நல்ல வரும்படி கிடைக்கும். மோட்டார் வண்டியும் வைத்துக்கொள்ளலாம். அப்துல்! உன் அபிப்பிராயம் என்ன?

அப்துல்:— என் தகப்பனர் என்னை வியாபாரத்தில் அமர்த்தப்போகிருர். வியாபாரத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். இதுவும் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமே.

வேலு:— நான் நமது நாட்டைக் காக்கும் சிப்பாய் ஆவேன்.

மணி:— அதுவும் நல்ல தொழிலே. கமலம்! படிக்கிருயே, உனது எண்ணம் என்ன?

கமலம்:— நான் நன்ருய்ப் படித்த பிறகு உபாத்தியாயர் வேலை பார்க்க எனக்கு எண்ணம். சிறுவர்களை நல்வழிப்படுத்தி, அவர்களுக்கு அறிவு உண்டாக்குவது நல்லதல்லவா? சிறு குழந்தைகளிடத்தில் பழக எனக்கு ஆசை

அதிகம். வகுப்பில் முதலாக இருக்கிருயே, சுந்தரி ! உனக்கு என்ன விருப்பம் ?

சுந்தரி:— படித்தால் உத்தியோகம்தான் பார்க்க வேண்டுமா ? நான் வீட்டிலேயே இருந்து வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்வேன்.

உபாத்தியாயர்:— உங்களது உரையாடல் நன்ருக இருக்கிறது. நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் உண்மையுடன் உழைத்தால் வெற்றி பெறலாம். பிறருக்கு உதவிசெய்வதால் புகழ் அடையலாம். எல்லோரிடமும் அன்புடன் இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம்.

பயிற்சி

1. இந்தப் பாடத்தில் சொல்லப்பட்ட எட்டுத் தொழில்கள் எவை ?

2. வகுப்பு முன் சென்று, ஒவ்வொரு தொழிலைப்பற்றியும் ஒவ்வொருவர் பேசுங்கள்.

3. **தெரிந்துகொள்:**

மணி, வேலு - இவை ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

கமலம், சுந்தரி-இவை பெண்ணைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள்.

ஆண்பால்	பெண்பால்
அப்பா	அம்மா
மகன்	மகள்
மாமன்	மாமி

18. விசிறி செய்தல்

1. கால் காகிதம் எடு. ஒரு கட்டை விரல் அகலம் வைத்து ஓரத்தில் மடி. அதே அகலம் வைத்து மாற்றி மாற்றி ஒவ்வொரு மடிப்பிலும் விரலால் அழுத்தி இழு. காகிதம் முழுவதையும் மடித்த பிறகு மடிப்பின் ஒரு நுனியைப் பிடித்துக் கொள். மற்றொரு நுனியைப் பிரி. முதற் படத்தில் காட்டிய காகித விசிறிபோல் ஆகிறதா, பார்?

1. காகித விசிறி. 2. வட்ட விசிறி. 3. ஓலை விசிறி.

2. கெட்டியான ஓர் ஈர்க்குச்சியை வட்டமாக வளைத்து இரு நுனிகளையும் நூலினால் கட்டு. அந்த வளையத்தை ஒரு வர்ணக் காகிதத்தில் வைத்து, ஈர்க்கின் ஓரமாக வெளிப்புறத்தில் ஒரு கோடு இழு. இந்த உருவம் வட்டமல்லவா? இந்தக் கோட்டின் வழியாகக் கத்தரித்து, வட்டத் துண்டை எடு. வட்டக் காகிதத்தின் ஓரத்தில் பிசின் தடவி, ஈர்க்கை வட்டத்தின் மேல் ஒட்டு.

அதன் ஒரு புறத்தை ஒரு மரக்குச்சியைப் பிளந்து அதனுள் செருகி நூலினால் கட்டு. இப்பொழுது குச்சியைப் பிடித்து விசிறிப் பார். இரண்டாவது படத்தைப் போல் ஒரு வட்டமான விசிறியாகும்.

3. கெட்டியான அட்டையை மூன்றாவது படத்தில் காட்டிய மாதிரி விசிறிபோல் கத்தரித்து எடு. ஒரு குச்சியின் நுனியைப் பிளந்து அதைச் செருகு. அட்டையில் துவாரம் செய்து நூலினால் குச்சியைச் சேர்த்துக் கட்டு.

பயிற்சி

1. பனையோலை விசிறி செய்யக் கற்றுக்கொள்.

2. இரண்டு விரல் அகலத்திற்கு வர்ணத் தாள்களை ஒரு சாண் நீளத் துண்டுகளாகக் கத்தரித்துக்கொள். ஒன்றிற்குள் ஒன்று சேர்த்து வளையங்களாக ஒட்டு. இந்தக் காகிதச் சங்கிலியை 3 முழ நீளம் செய்து சுவரில் அழகாக மாட்டு.

3. முதல் இரண்டு பத்திகளில் வந்துள்ள வினைச் சொற்களைப் பொறுக்கி எழுது.



19. பண்டிகைகள்

1. தீபாவளிப் பண்டிகை

1. எந்தப் பண்டிகையில் 'டப் டப்' என்று பட்டாசு சுடுகிறோம், தெரியுமா ? தீபாவளி தினத்தில் அல்லவா ? நமது தேசத்தில் இந்துக்களுக்குத் தீபாவளி ஒரு முக்கியமான பண்டிகை. பாலர் முதல் பெரியோர் வரையில் அதை விரும்பிக் களிப்புடன் கொண்டாடுகிறார்கள்.

2. தீபாவளி ஐப்பசி மாதத்தில் வரும். ஒரு மாதத்திற்கு முன்னமேயே ஜவுளிக் கடைகளில் பலவகையான துணிகள் வரவழைத்திருப்பார்கள். பண்டிகைக்கு ஒரு வாரம் முன்பே கடைகளில் பட்டாசு வகைகள் பல கட்டுக் கட்டாக நிறைந்து விடும்.

3. தீபாவளிப் பண்டிகை என்றைக்கு வரும் என்று பிள்ளைகள் ஆவலோடு பெற்றோரைக் கேட்பார்கள். தீபாவளி வந்துவிட்டதென்றால் புதிய வேஷ்டி, புதிய சொக்காய், புதிய புடவை, புதிய பாவாடை முதலிய புதிய உடைகள் எல்லாம் வாங்குவார்கள்.

4. வீட்டில் பெண்பிள்ளைகள் பலவகைப் பலகாரங்களையும் பட்சணங்களையும் உற்சாகத்துடன் தயார்செய்வார்கள். மாலையில் தகப்பனார் வந்ததும், "அப்பா, அப்பா! என்னென்ன பட்டாசுகள் வாங்கிவந்திருக்கிறீர்கள்?" என்று வெகு ஆவலாகப் பிள்ளைகள் கேட்பார்கள்.

5. தீபாவளி தினம் வீட்டிலுள்ள யாவரும் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து வெந்நீரில் மூழ்குவார்கள். பின்பு புதிய ஆடை அணிந்து பலகாரங்களைத் தின்பார்கள். சிறுவர்கள் வெகு பரபரப்போடு தின்றுவிட்டுத் தங்கள் பட்டாசுக் கட்டுகளை எடுத்து 'டப்! டுப்! டப்!' என்று வெடிக்கச்செய்வார்கள். தீபாவளி அன்று நமது தேசம் எங்கும் ஒரே சந்தோஷமாய் இருக்கும். தீபாவளிப் பண்டிகை நமது தேசீயப் பண்டிகை.

II. கிறிஸ்மஸ் பண்டிகை

1. கிறிஸ்மஸ் பண்டிகை ஒவ்வொரு வருஷமும் டிசம்பர் மாதத்தில் நடக்கும். அதைக் கிறிஸ்துவர்கள் ஏசுநாதர் பிறந்த தினமாக உற்ச

வம் கொண்டாடுகிறார்கள் அன்று தங்கள் பிள்ளைகளுக்குப் புதிய உடுப்புக்களும், தின்பண்டங்களும், பொம்மைகளும் வாங்கித் தருவார்கள். அப்பொழுது வீடுகளை அலங்கரிப்பார்கள் அன்றைய தினம் கோயிலுக்குச் சென்று ஜபம் செய்வார்கள். நீ கிறிஸ்துவர் கோயில்களைப் பார்த்திருக்கிறாயா?

2. கிறிஸ்மஸ் பண்டிகையை அடுத்து ஜனவரிப் பண்டிகை வரும். ஜனவரி மாதம் முதல் தேதி வருஷ ஆரம்பமல்லவா? அதையும் கிறிஸ்துவர்கள் ஒரு பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். அப்பொழுது நீங்கள் புதிய காலண்டர்கள் வாங்கிச் சுவரில் தொங்கவிடுகிறீர்கள் அல்லவா?

பயிற்சி

1. பூர்த்திசெய்:

1. தீபாவளி — மாதத்தில் வரும். — பண்டிகை டிசம்பர் மாதத்தில் வரும்.

2. தீபாவளி தினம் யாவரும் அதிகாலையில் — எண்ணெய் — வெந்நீரில் —.

3. கிறிஸ்மஸ் பண்டிகையின்பொழுது வீடுகளை —; கோயிலுக்குச் சென்று — செய்வார்கள்.

2. பின்வரும் ஒவ்வொரு வரியிலும் அந்த இனத்தைச் சேராத ஒரு பொருள் இருக்கிறது. அதைக் கண்டுபிடி.

1. மிட்டாய், லட்டு, பாக்கு, காராபூந்தி, வடை (பொருந்தாதது: பாக்கு)

2. ரசம், குழம்பு, மோர், வெற்றிலை, பாயசம்.

3. வாழைப்பழம், கத்தரிக்காய், கொய்யாப்பழம், மாம்பழம், பலாப்பழம்.

4. நெல், சோளம், கம்பு, கருணைக்கிழங்கு, கேழ்வரகு.

20. படத்தைப் பார்த்துச் சொல்

படத்தைப் பார்த்து விடை சொல் :

1. முதல் படத்தில் யார் யார் இருக்கிறார்கள்? பையன்கள் கையில் என்ன இருக்கிறது ? அவர்கள் எங்கே போகிறார்கள் என்று நினைக்கிறாய்?

 கிழவன் ஏன் கோலூன்றி நடக்கிறான் ? காற்று பலமாக அடிக்கிறதென்று எப்படித் தெரிகிறது ?

2. கிழவன் மேல் துணி ஏன் பறந்து ஓடுகிறது ? அதைப் பிடித்து எடுக்க

முடியாததால் பையன்களை அவன் என்ன கேட்கிறான் என்று நினைக்கிறாய்? பையன்கள் துணியை எடுத்துக்கொடுக்கிறார்களா?

பின்னால் வருவது யார்?

3. கிழவனிடம் பெண் என்ன கொடுக்கிறாள்? ஏன் எடுத்துவந்து கொடுக்கிறாள்? பின்னால் இருந்து யார் பார்க்கிறார்?

4. இந்தப் படம் எந்த இடம்? உபாத்தியாயர் பெண்ணிடம் என்ன கொடுக்கிறார்?

அதை அவனுக்கு ஏன் கொடுக்கிறார்? சில பிள்ளைகள் தலையைத் தொங்க விட்டுக்கொண்டிருக்கிறார்களே, ஏன்?

பயிற்சி

1. இதை ஒரு கதையாக உன் தங்கைக்குச் சொல்.

2. இந்தச் செயலைத் தாயாரிடம் தெரிவி.

நேற்று திருவிழா பார்க்கச் சென்றேன். அப்பாவும் என்னுடன் வந்தார். குதிரை ராட்டினத்தில் நான் மாத்திரம் ஏறினேன். குதிரை வேகமாகச் சுற்றியது. நான் சந்தோஷமாகக் கூவினேன். ராட்டினம் நின்றவுடன் இறங்கி, வீடு திரும்பினேன்.

3. நீ செய்த ஒரு வேலையைச் சொல். என்ன வேலை செய்தாய், எப்போது செய்தாய், எப்படிச் செய்தாய் என்று மூன்று வாக்கியங்கள் சொல்.



21. வண்ணாத்திப் பூச்சி

1. பூச்செடிகளுக்கு அருகில் நான் அங்கும் இங்கும் பறந்து செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்! பல வர்ணங்களுள்ள என் அழகைக் கண்டு, என்னைப் பிடித்து விளையாடவும் நீங்கள் ஆசைப்படுவதுண்டு. என் பெயர் என்ன தெரியுமா? என்னை வண்ணாத்திப் பூச்சி என்று அழைப்பார்கள். நான் பிறந்து வளர்ந்த கதை மிகவும் அதிசயமானது. அதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆதலால் அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

2. என் தாயாகிய வண்ணாத்திப் பூச்சி பறந்து வந்து ஒரு செடியினுடைய இலையின் அடிப்புறத்தில் நூற்றுக்கணக்கான சிறிய

முட்டைகளை இட்டாள். அந்த முட்டைகளில் ஒன்றாக நான் முதலில் இருந்தேன். பிறகு, சில நாட்களில் முட்டை வெடித்து ஒரு சிறு புழு ஆனேன். அப்பொழுது எனக்குப் பசி அதிகமாக இருந்ததால், அந்தச் செடியிலுள்ள பல இலைகளைத் தின்றுகொண்டிருந்தேன்.

3. சில நாளில் என் உடல் பருத்து வளர்ந்து நான் கம்பளிப்பூச்சி ஆனேன். உடல் எல்லாம் மயிர் மூடியிருந்ததால் என்னை அப்பொழுது பார்க்க உங்களுக்கு எவ்வளவு அருவருப்பாக இருந்திருக்கும்! பின்பு எனது உடலிலிருந்து உண்டான ஒருவகை நூலால் என்னைச் சுற்றி ஒரு கூடு அமைத்துக் கொண்டேன். அதில் பல நாட்கள் நல்ல தூக்கம் தூங்கினேன். அப்பொழுது என் உருவம் மாறிக் கொண்டேயிருந்தது. கால்களும் இறகுகளும் முளைத்து வளர ஆரம்பித்தன. கடைசியில் கூடு வெடித்துப் பல நிறமுள்ள அழகான வண்ணாத்திப் பூச்சியாக வெளிவந்தேன். எனது உருவ மாறுபாடுகளை நீங்கள் நம்பக்கூடமாட்டீர்கள். என்றாலும், இதெல்லாம் உண்மையே.

4. இப்பொழுது பூக்கள்தோறும் சென்று, தேனை உறிஞ்சிக் குடித்து, இனிமையாகக் காலங் கழித்துவருகிறேன். இன்னும் விரிவாகவும் என் கதையைச் சொல்லலாம். ஆனால் எனக்கு இப்பொழுது பசிக்கிறது. நான் தேன் குடிக்கப் போகவேண்டும்.

5. உங்களை ஒன்று மட்டும் வேண்டிக்கொள்கிறேன். என்னைப்போன்ற சிறு பூச்சிகளைப் பிடித்து நீங்கள் விளையாடுவது சரியன்று. எங்களுக்கு அப்பொழுது பொறுக்கமுடியாத நோவு உண்டாகிறது. ஆகையால், நீங்கள் அப்படிச் செய்யாதீர்கள்.

பயிற்சி

1. வண்ணாத்திப் பூச்சியின் நான்கு உருவ மாறுபாடுகளைக் கண்டுபிடித்து எழுது.

2. வண்ணாத்திப் பூச்சி கடைசிப் பாராவில் என்ன வேண்டிக் கொண்டது?

3. பின் வருவனவற்றை மிருகர், பட்சி, மரஞ்செடி, பூச்சி என்ற நான்கு பிரிவுகளாக வரிசைப்படுத்தி எழுது:

பனை	பன்றி	தும்பி	குரங்கு
கருடன்	ரோஜா	ஆந்தை	பேன்
முருங்கை	வாத்து	யானை	மண் புழு
கரப்பு	ஒட்டகம்	கரும்பு	நரி

22. வண்ணாத்திப் பூச்சி (பாட்டு)

1. சின்னச் சின்ன சிறுபுழுவே!
சிறிய முட்டைதனில் பிறந்தாய்,
என்ன சொல்வேன் உன்பசியை?
இலையை எல்லா தின்றாயே.

2. தின்றாய், கொழுத்தாய், திரண்டுருண்டாய்;
தின்ற மயக்கம் தீர்ந்துறங்க
நன்றாய் நூலை நூற்றதனால்
நல்ல கூடும் அமைத்தாயே.

3. சிறந்த கூட்டில் படுத்துறங்கிச்
சில நாள் செல்லச் சிறுவீட்டைத்
திறந்து வெளியே வந்தாயே
நிறம்சேர் சிறகை விரித்தாயே.

4. பறந்து பறந்து செடிதோறும்
பண்பாய் நடனம் செய்கின்றாய்;
சிறந்த உன்பொன் உடைதன்னைச்
சிறக்க அசைத்துக் களிக்கின்றாய்.

5. உன்னைப்போல இன்தேனை
உண்டு வாழ ஆசைகொண்டேன்;
உன்னைப்போன்ற பேரழகு
உலகில் எனக்கு வேண்டுவனே.

பயிற்சி

திரண்டுருண்டாய் = திரண்டு உருண்டையானாய். பண்பாய் = நன்றாக. இன் தேன் = இனிப்பான தேன். பேரழகு = பெரிய அழகு = மிக்க அழகு. உறங்க = தூங்க. களிக்கின்றாய் = சந்தோஷப்படுகின்றாய்.

23. விடைக்கேற்ற கேள்வியைக் கண்டுபிடி

இவை இந்தப் பக்கத்தின் அடியிலுள்ள வினைக் களுக்கு விடையாகும். ஐந்து நிமிஷத்தில் படித்து, விடையைக் கண்டுபிடி. கேள்வியின் இலக்கத்தை விடைக்கு அருகில் எழுது.

அமாவாசை தினத்தில்; நனையாமல் இருக்க; சூரியவெளிச்சம் இல்லாததால்; உடனே துணியை அவிழ்த்துத் தூர எறிந்துவிடவேண்டும்; இரவில் காணலாம்; கிழக்கே உதிக்கும்; தயிர் ஆகும்; மீன்கள்; தண்ணீரில் இறங்காமல் அக்கரை போக; மயில்; நேரம் கண்டுபிடிக்கலாம்; தூசி படிந்து ஈ மொய்த்திருப்பதால்; உபாத்தியாயர்.

1. மழையில் போகும்போது ஏன் குடை பிடித்துக்கொள்ளுகிறோம்?

2. நட்சத்திரங்களை எப்பொழுது காணலாம்?

3. சந்திரனை எந்தத் தினத்தில் பார்க்க முடியாது?

4. கடிகாரத்தின் உபயோகம் என்ன?

5. இரவில் ஏன் விளக்கு ஏற்றுகிறோம்?

6. காய்ச்சிய பாலில் கொஞ்சம் மோர் விட்டால் என்ன ஆகும்?

7. தெருவில் விற்கும் பட்சணங்களை ஏன் சாப்பிடக்கூடாது ?

8. ஆறுகளில் பாலம் எதற்காக ?

9. துணியில் தீப் பிடித்துக்கொண்டால் என்ன செய்யவேண்டும் ?

10. பறவைகளுள் அதிக அழகுள்ளது எது?

11. சூரியன் எங்கே உதிக்கும் ?

12. பாடங்களைக் கற்பிப்பவர் யார் ?

13. தண்ணீரில் வாழ்பவை எவை ?

பயிற்சி

கேள்வி கேட்கும்போது ஏன், எங்கே, எது, எப்பொழுது, என்ன, எந்த, எதற்காக, யார், எவை என்கிற சொற்களை உபயோகிக்கிறோம். இவை ஒவ்வொன்றையும் வைத்து ஒரு கேள்வி எழுது.

24. தெனலிராமன் கதை

1. தெனலி என்ற ஊரில் இராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் சாமர்த்திய சாலி. அவன் வேடிக்கையாகப் பேசுவான். அவனது புத்தியையும் விகடப் பேச்சையும் எல்லாரும் புகழ்ந்து பேசினர்கள். இதைக் கேள்விப்பட்ட அந்த நாட்டின் அரசர் தெனலிராமனை வரவழைத்தார். அவனை அரச சபையில் இருக்கச் செய்தார். அவனது பேச்சுக்களும் செய்கைகளும் எல்லாருக்கும் சிரிப்பு உண்டாக்கும். அரசரும் மகிழ்ச்சியடைந்து இராமனுக்குப் பல வெகுமதிகள் கொடுத்தார்.

2. இராமன் பணக்காரனுன். அவனிடம் அதிகப் பணம் இருக்கிறது என்று திருடர்கள் அறிந்தார்கள். அதைத் திருடிக்கொண்டு போக வேண்டுமென்று அவர்கள் ஒரு நாள் இரவு இராமன் வீட்டுக் கூரையில் ஏறி, ஒளிந்துகொண்டிருந்தார்கள். இராமன் இவ்விஷயத்தை எப்படியோ தெரிந்துகொண்டான்.

3. திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கண்டு இராமன் பயப்படவில்லை. அவர்களை எப்படியாவது ஏமாற்றவேண்டுமென்று நிச்சயம்செய்தான். அவர்கள் இருப்பதைத் தான் அறிந்துகொண்டதாக அவன் காட்டிக்கொள்ளவில்லை. ஒன்றும் தெரியாதவன் போலப் பாசாங்கு செய்தான். உள்ளே சென்று தன் மனைவியிடம் இரகசியமாகப் பேசினன். பிறகு அறைக்குள் ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிச் சென்ருன்.

4. "ஊரில் திருடர் பயம் அதிகமாயிருக்கிறது; அரசர் கொடுத்த காசு பணத்தை யெல்லாம்

இந்தப் பெட்டியில் போட்டுப் பூட்டி ஜாக்கிரதை யாக நமது புறக்கடைக் கிணற்றில் போட்டுவைப் போம். பிறகு வேண்டியபோது எடுத்துக்கொள்ள லாம்" என்று இராமன் தன் மனைவியிடம் உரக்கச் சொன்னன். "அதுவே நல்ல யோசனை" என்று அவளும் ஒப்புக்கொண்டாள். இந்த உரை யாடலைக் கேட்ட திருடர்கள் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.

5. "நமக்குத் தேடவேண்டிய துன்பம் இல்லை. கிணற்றிலிருந்து பெட்டியைச் சுலபமாக எடுத்துப் போகலாம்" என்று சொல்லிக்கொண் டார்கள். பெட்டியைக் கிணற்றில் போடட்டும் என்று காத்திருந்தார்கள்.

6 இராமனும் அவன் மனைவியும் பெட்டியில்

சில கற்களைப் போட்டுப் பூட்டினார்கள். வெகு சிரமப்பட்டுப்பெட்டியை இருவரும் தூக்கிச் கொண்டுபோய்ப் புறக் கடைக் கிணற்றில் தள்ளினர்கள். 'தடார்' என்று சத்தம்கேட்டது. பெட்டி தண்ணீரில் மூழ்கிவிட்டது. "நமக்கு இனி பயமில்லை" என்று இருவரும் பேசிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

7. அவர்கள் வீட்டினுள் மறைந்த சில நிமிஷங்களுக்குப் பிறகு திருடர்கள் கூரையி லிருந்து இறங்கி, கிணற்றண்டை வந்து பார்த்

தார்கள். கிணற்றின் அருகே ஏற்றமரம் இருந்தது. அதன் கோலை உள்ளே விட்டுப் பார்த்தார்கள்.

தண்ணீர் அதிக ஆழம் எனத்தெரிந்தது;முழுகி எடுப்பது கடினம் எனத் தோன்றியது.' பாதித் தண்ணீரை இறைத்து விடுவோம். பிறகு கிணற்றில் இறங்கிப் பெட்டியைக் கோலில் கட்டி மேலே இழுத்து விடலாம்.' என்று எண்ணினார்கள். உடனே ஏற்றத்தில் வாளியைக் கட்டி, நீரை இறைக்கத் தொடங்கினார்கள். வாய்க்காலில் தண்ணீர் ஓட ஆரம்பித்தது.

8. வீட்டிற்குள் இருந்த இராமன், திருடர்கள் செய்வதைக் கவனித்துக்கொண்டே இருந்தான். வாய்க்காலில் தண்ணீர் ஓடும் சத்தம் கேட்டவுடன், மெதுவாக இராமன் செடிகளுக்கு இடையே புகுந்தான். வாய்க்காலில் வரும் தண்ணீரைச் சரியானபடி



பாத்திகளுக்கும் செடிகளுக்கும் பாயும்படி செய்துகொண்டிருந்தான். நீர் இறைப்பதிலேயே கவனமாயிருந்த திருடர்களுக்கு இராமன் செய்த

வேலை தெரியவில்லை. இரவு முடிந்து கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. காகங்கள் கூவிக் கொண்டு பறந்தன. ஆனால் தண்ணீர் முழுவதும் இறைக்க முடியவில்லை. பொழுது விடிந்ததால் திருடர்கள் இறைப்பதைவிட்டு வீட்டுக்கு ஓட ஆரம்பித்தார்கள். இராமன், "தோழர்களே! எல்லாச் செடிகளுக்கும் தண்ணீர் நிறையப் பாய்ந்துவிட்டது. இனி நீங்கள் இறைப்பதை நிறுத்திவிடுங்கள். உமது உபகாரத்திற்கு மிகவும் வந்தனம்." என்று சொன்னான். திருடர்கள் திடுக்கிட்டு ஒரு பதிலும் சொல்லமுடியாமல் வேக மாக ஓடிப்போனார்கள்.

9. மறுநாள் ஊரில் உள்ளவர்களுக்கு எல் லாம் இந்தச் செய்தி தெரியவந்தது. இராமனின் சாமர்த்தியத்தை அவர்கள் புகழ்ந்து பேசினார்கள். திருடர்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்து சிரித் தார்கள்.

பயிற்சி

1. கேள்விகள்:

1. திருடர்கள் ஒளிந்திருப்பதை அறிந்த இராமன் என்ன செய்தான்?
2. கிணற்று நீரைத் திருடர்கள் ஏன் இறைத்தார்கள்?
3. திருடர்கள் தண்ணீர் இறைக்கும்போது, இராமன் என்ன செய்தான்?
4. திருடர்களை ஏமாற்றிய விதத்தை இராமனே அரசரிடம் சொல்வது போலச் சொல்.

2. பூர்த்தி செய்:

(உதாரணம்) ஏற்றத்தால் தண்ணீர் இறைக்கலாம்.

— பென்சில் சீவலாம்.	— விறகு பிளக்கலாம்.
— மண் வெட்டலாம்.	— மரம் அறுக்கலாம்.
— நோட்டுத் தைக்கலாம்.	— துணி கத்தரிக்கலாம்.

800 009
13709

25. படித்தலும் எழுதலும்

1. நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை பேசிவருவது தமிழ்மொழி. தமிழில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பழகத்தான் இந்தப் பாரதி தமிழ் வாசகத்தைப் படிக்கிறீர்கள்.

2. பேசும்பொழுது நேராக நிமிர்ந்து நின்று, எதிரில் நிற்பவரின் முகத்தைப் பார்த்துப் பேசுவதே சரி. சொல்லவேண்டிய விஷயங்களை ஒழுங்குபடுத்திக் கோர்வையாகச் சொல். காதில் விழாதபடி தாழ்ந்த குரலில் பேசுவது சரியல்ல. கொச்சையான சொற்களை விலக்கவேண்டும், சொற்களின் உச்சரிப்பு திருத்தமாகவும் தெளிவாகவும் இருப்பது அவசியம். ல, ள, ழ, ர, ற, ன, ண இந்த எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கப் பழகு.

3. வாய்விட்டு உரக்க வாசித்தல், வாயைத் திறவாமல் மனத்திற்குள் வாசித்தல் எனப் படித்தல் இருவகைப்படும். மனத்திற்குள் வாசித்தல் மௌன வாசிப்பு எனப்படும். உரக்க வாசிப்பதில் எழுத்து எழுத்தாகச் சேர்த்துப் படிப்பதுகூடாது. அதிக வேகமாக வாசிப்பதும் தகாது. பொருள் விளங்கும்படி நிதானமாக வாசிக்கவேண்டும். படிக்கும் விஷயத்திற்கு ஏற்றவாறு சந்தோஷம், துக்கம், கோபம், ஆச்சரியம் இவைகள் கேட்போர் மனத்தில் உண்டாகும்படி வாசிப்பதே சிறந்தது.

4. மௌனப் படிப்பை அதிகமாகப் பழக்கிக் கொள். மனம் படிப்பில் ஊன்றி, விஷயங்களைச் சீக்கிரத்தில் அறிய இப்பழக்கம் நல்லது. படிக்கும் விஷயம் உன் கண்முன் நடப்பது போல் நினைத்துக்கொள். இதனால் உன் மனம் வேறு விஷயங்களில் செல்லாது; படிக்கும் விஷயமும் நன்றாகப் புரியும். நீ தானாகவே படித்துப் பயிற்சிகளைச் செய்யும்படி இந்தப் புத்தகத்தில் பல பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் நீ பழக்கிக்கொண்டால் பிறகு பத்திரிகைகளையும், கதைப் புத்தகங்களையும் தானாகவே படித்தறியலாம்.

5. எழுதும்போது கவிழ்ந்துகொண்டு எழுதாமல் நேராக உட்கார்ந்துகொண்டு எழுது. கையில் பென்சில் அல்லது பேனாவைச் சரியான படி பிடித்துக்கொண்டு எழுதப் பழகு. பிறருக்குப் புரியும்படி எழுத்துக்கள் திருத்தமாகவும், அழகாகவும் அமையவேண்டும். அத்துடன் வேகமாக எழுதவும் பழகிக்கொள். எழுத்துப் பிழைகள் இருக்கக்கூடாது. வரி கோணாமலும், சொற்களுக்கு இடையிலும் வாக்கியங்களுக்கு இடையிலும் இடம் விட்டும் எழுது.

பயிற்சி

1. அழகாக எழுது:

1. அண்ணன் வந்தவுடன் வண்ணான் கொண்டுவந்த துணிகளை எண்ணிப் பார்த்தான்.

2. கன்றுக்குட்டியும் பன்றிக் குட்டியும் வேலியண்டை விளையாடின.

3. பந்து வாங்கிவந்தாயா என்று வரதன் கேட்டான்.

4. வாழை மரத்தினடியில் அதிக நிழல் இல்லை.

2. மனதுக்குள்ளே இரண்டு தடவை படித்து, புத்தகத்தை மூடிவிட்டு, படித்த விஷயத்தைத் தகப்பனாரிடம் சொல்லுவதுபோலச் சொல்:

மாமா புதியதொரு மாட்டு வண்டியில் வந்து இறங்கினார். தகப்பனார் பக்கத்துத் தெருவில் உள்ள பஞ்சாயத்து ஆபீசுக்குப் போயிருந்தார். கந்தனை வேகமாகப் போய்த் தகப்பனாரிடம் சொல்லிவிட்டு வரும்படி தாயார் அனுப்பினாள். திரும்பி வரும்பொழுது மளிகைக் கடையில் ஒரு படி பருப்பு வாங்கிவரச் சொன்னாள்.

3. 24-வது பாடத்தை 12 நிமிஷங்களில் மௌனமாகப் படி:

படிக்க ஆரம்பிக்கும்போது மணி, நிமிஷம் எவ்வளவு என்றும், நீ படித்து முடிந்தபிறகு எவ்வளவு நிமிஷங்கள் ஆயின என்றும் உபாத்தியாயர் சொல்வார்.

4. குறித்த நேரத்தில் எழுது:

21-ம் பக்கம் 5-ம் பாராவை 15 நிமிஷத்திற்குள் வேகமாகவும் அழகாகவும் எழுது.

---

26. மகாத்மா காந்தி

1. இந்தப் படத்தைப் பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். இவர் யார் தெரியுமா? இவர் தான் மகாத்மா காந்தி.

2. மகாத்மா காந்தி நமது தேசத்துக்காக உடல், பொருள், உயிர் இம்மூன்றையும் அர்ப்பணஞ்செய்தார். இவருடைய பெருமுயற்சியினல் தான் ஆங்கில ஆட்சி நீங்கி, நம் நாடு பூரண சுதந்திரம் பெற்றது. 'இவர் நமது தேசத்தின் தந்தை' ஆவர். இம்மகானைப்பற்றிய வாழ்க்கை விவரங்களை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள் அல்லவா?

3. 1869-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி காந்தி மகான் பிறந்தார். இவர் பிறந்த இடம் பம்பாய் மாகாணத்திலுள்ள போர்பந்தர். இவர் வைசிய குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை முதலில் போர்பந்தரிலும், பிறகு இராஜகோட்டையிலும் மந்திரியாக இருந்தார்.

4. காந்தியின் தாய் இவரைக் குழந்தைப் பருவம் முதல் நல்ல வழியில் பழக்கிவந்தாள். இவருக்குத் தமையன் இரண்டு பேர். பன்னிரண்டாவது வயதில் இவருக்குக் கலியாணம் நடந்தது. இவர் மனைவியின் பெயர் கஸ்தூரி பாய். இவருக்கு மூன்று குமாரர்கள்.

5. தமது பதினேழாம் வயதில் காந்தி இங்கிலாந்துக்குப் போனர். வக்கீல் பரீட்சையில் தேறி, பம்பாய்க்குத் திரும்பினர். வக்கீல் தொழில் சம்பந்தமாகத் தென்னப்பிரிக்கா என்ற அன்னிய நாடு சென்றார். நமது தேச மக்கள் ஆயிரக்



மகாத்மா காந்தி

கணக்கில் தமது பிழைப்புக்காக அங்கே சென்று கூலிவேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டார். அந்த நாட்டில் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் பார்த்தார். அவருக்கு மனம் பொறுக்கவில்லை. சுமார் இருபது வருஷம் அங்கேயே தங்கி, அவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தார்.

6. பிறகு 1914-ல் அவர் இந்தியாவுக்குத் திரும்பினார். பம்பாய் மாகாணத்தில் சபர்மதி என்ற இடத்தில் முதலில் வசித்துவந்தார். பின்பு மத்திய இந்தியாவில் வர்தா என்னும் கிராமத்தில் வசித்தார். நமது தேசத்திலுள்ள அநேக ஏழைத் தொழிலாளர்கள் உண்ண உணவு இல்லாமலும், உடுக்கத் துணி இல்லாமலும் வருந்துவதைப் பார்த்தார். அவர்களைப்போல் தாமும் எளிய வாழ்க்கை நடத்தினார். ஒவ்வொருவரும் ராட்டையில் நூல் நூற்கவேண்டும் என்றார்; கதர் ஆடையையே அணியவேண்டும் என்றார். அவரும் அவ்விதமே தமது வாழ்நாள் முழுவதும் செய்து வந்தார்.

7. ஒரு சமயம் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியைக் காந்தியடிகள் பார்க்க நேர்ந்தது. அப்பொழுதும் அவர் ஆடம்பரம் இல்லாத ஒரு சிறிய கதர்த்துண்டைக் கட்டிக்கொண்டே மன்னருடன் பேசினார்.

8. தாம் துன்பம் அடைந்தாலும் பிறர் சுகப்படவேண்டும் என்பது இவரது கொள்கை. இவர் சாதிபேதமில்லாமல் எல்லாரிடத்திலும் அன்பு காட்டினார்; சத்தியத்தையும், அஹிம்சா

தர்மத்தையும் விரதமாகக் கடைப்பிடித்து வந்தார். இதனால்தான் இவரை 'மகாத்மா' என்று கொண்டாடுகிறோம்.

9. 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ம் தேதி காந்தியடிகளை டில்லியில் தேசத் துரோகி ஒருவன் சுட்டுக் கொன்றது உலகத்தையே திடுக்கிடச் செய்தது. இப் பூமண்டலத்தில் காந்தி மகானைப் புகழாதவர் கிடையாது. அவர் நடத்திக் காட்டியவும், அவர் போதித்துவந்தவுமான சத்தியம், அஹிம்சை, வகுப்பு ஒற்றுமை முதலிய கொள்கைகள் என்றைக்கும் அழியாமல் நிலைநிற்கும். சிறு வயதிலிருந்தே நீங்கள் அவைகளை விரதமாக அனுசரித்து வாருங்கள். அவ்விதஞ் செய்தால் நீங்களும் மேன்மையடைவீர்கள்; நமது நாடும் முன்னேற்றம் அடையும்.

பயிற்சி

1. காந்தியை ஏன் மகாத்மா என்று கொண்டாடுகிறோம்?
2. காந்தியின் படத்தைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
3. காந்தியைப்பற்றி இரண்டாவது பாராவில் என்ன சொல்லியிருக்கிறது?
4. அவர் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியைப் பார்த்தது எந்தப் பாராவில் சொல்லப்படுகிறது?

தெரிந்துகொள்:

நியாயம் என்பதற்கு மாறான சொல் அநியாயம்.

இதேவிதம் பின்வரும் சொற்களை ஜோடி ஜோடியாகப் பொறுக்கி எழுது:

நல்ல	அசௌக்கியம்	சுகம்	உண்மை
கஷ்டம்	பகல்	தீமை	பெரியவர்
ஏழை	பொய்	சிறியவர்	பணக்காரன்
கெட்ட	சௌக்கியம்	இரவு	நன்மை

27. பாய் பின்னுதல்

1. நமக்கு உண்ண உணவுவேண்டும்; உடுக்க ஆடை வேண்டும்; வசிக்க வீடு வேண்டும்; படுக்கப் பாய் வேண்டும். நாம படுக்கும் பாய் எதனுல் செய்யப்படுகிறது ? எப்படிச் செய்யப்படுகிறது ?

2 நாம் சாதாரணமாகப் படுக்கும் பாய் ஒரு விதக் கோரையினுல் நெய்யப்படுகிறது. வாய்க் கால் ஓரங்களிலும், குளத்து ஓரங்களிலும் கெட்டி யான கோரை அடர்த்தியாக வளர்ந்திருக்கும். இந்தக் கோரையின் தண்டு கூடாக இராமல் பிரம்பைப்போலக் கெட்டியாக இருக்கும். இதை எழுத்தாணிக் கோரை என்பார்கள். சில இடங் களில் இது காடுபோல் மண்டி, மூன்று அல்லது நான்கு அடி உயரம் வளரும். மங்கலான பூ இதன் நுனியில் பூக்கும்.

3. நீண்டு வளர்ந்த பச்சைக் கோரைப் புற் களை அறுத்து வந்து, எழுத்தாணியால் நார்போல் மெல்லியதாகக் கிழித்து வெயிலில் உலர்த்துவார் கள். அவை காய்ந்ததும் மஞ்சள் நிறமாக மாறும். அவைகளைச் சேகரித்துக் கட்டுக்கட்டாகக் கட்டி வைப்பார்கள்.

4. துணி நெய்வதற்குச் சேணியர்கள் உப யோகிக்கும் தறியைப் பார்த்திருக்கிருயா? கோரைப் பாய் பின்ன அதைவிடச் சிறியதாகவும், சுலபமாக வும் ஒரு தறி சுமார் ஐந்து ரூபாய் செலவில் தயார் செய்துகொள்ளலாம். பாயின் அளவுக்குத் தக்கபடி

இந்தத் தறி நான்கு அடி அகலமும், ஏழு அடி நீளமும் இருக்கும். முறுக்கிய சணல் கயிறு



களைப் படத்தில் காட்டியதுபோல் வரிசையாக, நீளத்தில் ஒரு அங்குலம் விட்டு விட்டு முதலில் கட்டுவார்கள்; பிறகு உலரவைத்த கோரை நார் களைத் தண்ணீரில் நனைத்துச் சிறிது பதப்படுத்து வார்கள். நாரை ஒவ்வொன்ருக எடுத்து, தறியி லுள்ள கயிறுகளுக்கு இடையில் மாறிமாறி மேலுங் கீழுமாகக் கோர்ப்பார்கள். இப்படிக் கோர்ப்ப தற்குச் சாதகமாக ஒரு குச்சியை உபயோகிப்ப துண்டு. வேண்டிய நீளம் நெய்தபிறகு, பாயைத் தறியை விட்டு எடுத்து, இரண்டு நுனிகளிலும் கோரை விழாமலிருக்க முடிச்சுகள் போடுவார் கள். இரண்டு பக்க ஓரங்களிலும் கோரையைக் கொஞ்சம் மடித்து, பிரியாமலிருக்கச் சணல் கயிற்ருல் தைத்துவிடுவார்கள்.

5. கோரையை எவ்வளவு மெல்லியதாகக் கிழிக்கிருேமோ அவ்வளவு மிருதுவாகப் பாய்

இருக்கும். அவ்விதப் பாயில் நாம் படுக்கும்போது உறுத்தாமல் சுகமாக இருக்கும்.

6. கிழித்த கோரைகளைப் பலவித வர்ணங்கள் கலந்த தண்ணீரில் நனைத்துக் கோரைகளுக்கு வர்ணம் ஏற்றலாம். இவ்வித வர்ணக் கோரைகளால் பல உருவம் அமையும்படி பாய் பின்னுவதுமுண்டு. இப் பாய்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

7. பாய் பின்னுவது ஒரு குடிசைத் தொழில். நமது கிராமங்களில பலர் இத்தொழில் செய்து பணம் சம்பாதித்துப் பிழைக்கிறார்கள்.

பயிற்சி

1. உன் பள்ளிக்கூடத்தில் பாய் நெய்யும் தறி இருக்கிறதா? கூடுமானால் பாய் நெய்யக் கற்றுக்கொள்.

2. அடியிற் கண்ட வாக்கியங்களில் பொருத்தமானதை வைத்துப் பூர்த்திசெய்:

கருங்கல்	உப்பு
சர்க்கரை	கம்பளி
நல்லெண்ணெய்	மிளகு
தேன்	மேசை

—— கரும்பிலிருந்து செய்யப்படுகிறது.
—— தேனீக்களால் சேகரிக்கப்படுகிறது.
—— ஒரு கொடியின் காய்.
—— கடல் நீரிலிருந்து எடுக்கப்படுகிறது.
—— மரத்தினால் செய்யப்படுகிறது.
—— எள்ளிலிருந்து எடுக்கப்படுகிறது.
—— மலையிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது.
—— ஆட்டு மயிரினால் நெய்யப்படுகிறது.

3. ஆறாவது பாராவிலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

28. நிலாவோடு பேசுதல்

நிலா! நிலா! எங்கே போகிறாய்?

மண் எடுக்கப் போகிறேன்.

மண் எதற்கு? சுவர் வைக்க.

சுவர் எதற்கு? வீடு கட்ட.

வீடு எதற்கு? குழந்தைகள் வளர.

குழந்தைகள் எதற்கு?

தாழம்பாயிலே தவழ்ந்து விளையாட,
பிரப்பம்பாயிலே புரண்டு விளையாட,
கோரைப்பாயிலே குதித்து விளையாட,
ஓலைப்பாயிலே ஓடி விளையாட.

பயிற்சி

1. இதில் வந்துள்ள நால்வகைப் பாய்களை எடுத்தெழுது.
2. சிறிய குழந்தைகள் எப்படி விளையாடும்?
3. புத்தகத்தை மூடிவிட்டு, உன் தோழனைப் பார்த்து மேலேயுள்ள கெள்விகளைக் கேள். அவன் பதில் சொல்ல வேண்டும்.

29. பூனைக்கு யார் மணி கட்டுவது?

(பச்சைமலை பவழமலை' மெட்டு)

உலகிலுள்ள எலிகளெல்லாம்
ஓரிடத்தில் கூடி
பலவிதமாய்ப் பூனையினால்
படுந்துயரைக் கூறும்.
பருத்த உடல் சிறுத்த கண்ணன்
பழைய பெருச்சாளி
பரிவுடனே எழுந்து நின்று
பகர்ந்திடுதல் கேளும்.
"எண்ணி யொன்றை நம்மவர்கள்
ஏற்றபடி செய்தால்
மண்ணினிலே மடியாமல்
வாழ்ந்திடலாம் யாரும்."
அப்பொழுது அதிசூரன்
அவசரமாய் எழுந்து,
"அறிந்துவிட்டேன் பூனை பயம்
அழிக்கவழி ஒன்றே;
பெரும்பூனை கழுத்தினிலே
பெரிய மணி ஒன்றைக்

கருங்கயிற்றால் கட்டிவிட்டால்
கலங்கிடுதல் வேண்டாம்."
அங்கிருந்த எலிகளெல்லாம்
அதுவே சரியென்று
கொண்டுவந்தன துள்ளியோடி
பெரிய மணி ஒன்றை.
எங்கிருந்தோ வந்ததையா
எலிக்கிழடு ஒன்று
அங்கிருந்த எலிச் சபையை
அன்புடனே பார்த்து,
"பெரும்பூனை கழுத்தினிலே
பெரிய மணி எடுத்து
அருகில் நின்று கட்டவல்ல
அதிசூரன் யாரே?"
எனக்கிழடு சொல்லும் முன்னம்
எங்கிருந்தோ பூனை
எழுந்துவர எலிகளெல்லாம்
எடுத்ததையா ஓட்டம்!

பயிற்சி

1. கூறும் = சொல்லும். பரிவுடனே = ஆசையுடனே. பகர்ந்திடுதல் = சொல்லுதல். மண்ணினிலே = பூமியிலே. மடியாமல் = சாகாமல். அதி = மிக்க. எலிக்கிழடு = கிழ எலி.

2. இந்தக் கதையை உன் தம்பிக்குச் சொல்.

30. உசேன் ஆலியும் சுல்தானும்

ஓர் ஊரில் உசேன் ஆலி என்னும் பெயருள்ள மகம்மதியர் ஒருவர் இருந்தார். அவர் தொண்டு கிழவர்; சிறு வயது முதல் பயிர்வேலை செய்து பிழைத்துவந்தார்.

தள்ளாத வயதில் உசேன் ஆலி ஒரு நாள் சில மாங்கன்றுகளைச் சாலை ஓரத்தில் நட்டு, மண் அணைத்து, தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, அந்த நாட்டு மகம்மதிய அரசராகிய சுல்தான் தமது குதிரையின்மேல் ஏறிக்கொண்டு மந்திரியுடன் அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். உசேன் மாங்கன்றுகள் நடுவதைக் கண்ட அவர், குதிரையை நிறுத்திக் கீழே இறங்கி, அந்தக் கிழவரைப் பார்த்து, "வயது முதிர்ந்த பெரியவரே! நீர் என்ன செய்கிறீர்?" என்று கேட்டார்.

ஆலி (சுல்தான் என்று அறியாமல்):—இந்த மாங் கன்றுகளை நட்டுத் தண்ணீர் வார்க்கிறேன்.

சுல்தான்:—இந்தக் கன்றுகள் மரங்களாகிப் பழங்கள் தர எத்தனை நாளாகும்?

ஆலி:—சுமார் பத்து வருஷங்கள் ஆகும்.

சுல்தான்:—உமது வயது என்ன?

ஆலி:—எழுபத்தைந்து.

சுல்தான் (சிரித்துக்கொண்டு):—நன்றாக இருக்கிறது! நீர் இன்னும் பத்து வருஷங்கள் உயிர் பிழைத்து இருந்து, இந்த மரங்களின் பழங்களைத் தின்னப்போகிறீரா? இது வீண் காரியமல்லவா?

ஆலி:—அப்படியல்ல. என் தகப்பனும் பாட்டனும் நட்டு வளர்த்த மரங்களின் பழங்களை நானும், என் குடும்பத்தாரும் தின்றுவருகிறோம். அதுபோல எனது சந்ததியாருக்காகச் சில மரங்களை வளர்த்துவைப்பது என் கடமை. நான் அப்படிச் செய்தால்தான் அவர்கள் சுகமாக வாழமுடியும்.

அந்தக் கிழவர் சொன்னதைக் கேட்டதும் சுல்தான் மகிழ்ச்சியடைந்தார். உசேனை மெச்சி, அவருக்கு நூறு ரூபாய் இனம் கொடுக்கும்படி மந்திரியிடம் தெரிவித்தார். மந்திரி கொடுத்த ரூபாயை வாங்கிக்கொண்ட ஆலி, தன் முன்னால் நிற்பவர் சுல்தான் அவர்களே என்று அறிந்து, அவரை வணங்கி, "மகாராஜாவே! இன்று நட்ட

செடிகளின் பலன் பத்து வருஷங்களுக்குப் பிறகு எனது சந்ததியாருக்குத்தான் கிடைக்குமென்று நான் நினைத்தேன். ஆனால் இப்பொழுதே எனக்கு இந்தப் பணம் பலனாகக் கிடைத்தது" என்று சொல்லி அவரை வாழ்த்தினான்.

சுல்தானும் மந்திரியும், "நமது குடிகள் எல்லோரும் இந்த ஏழைக் கிழவரைப்போல் இருந்தால் எவ்வளவு நல்லது!" என்று பேசிக்கொண்டு தமது வழியே சென்றார்கள்.

பயிற்சி

1. கேள்விகள் :

1. உசேன் ஆலி மாங்கன்றுகளை நட்ட நோக்கம் என்ன?
2. அதன் பலன் அப்பொழுதே எப்படிக் கிடைத்தது?
3. மெச்சி, சந்ததியார், முன்னோர்—இப்பதங்களை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

2. சொல் பயிற்சி :

1.

மா + மரம் = மாமரம்	மா + இலை = மாவிலை
மா + வடு = மாவடு	மா + பழம் = மாம்பழம்
மா + காய் = மாங்காய்	மா + பூ = மாம்பூ
மா + கன்று = மாங்கன்று	மா + செடி = மாஞ்செடி

2.

வருகிறார்	வந்தார்	வருவார்
நடுகிறார்	நட்டார்	நடுவார்
செய்கிறீர்	செய்தீர்	செய்வீர்

3. இதே விதம் பூர்த்திசெய் :

போகிறாள்	——	——
——	கொடுத்தார்	——
——	——	விளையாடுவேன்
——	நினைத்தாய்	——

31. அவரைப் பாப்பா

1. தோட்டத்துக் குழியிலே
வட்டமான மண்ணிலே
சொகுசாகத் தூங்குகிருய்
சின்ன அவரைப் பாப்பா
சின்ன அவரைப் பாப்பா!

2. சொட்டுச் சொட்டாய் மழைபெய்ய
பட்டப்பகல் வெளிச்சம் விழ
சீக்கிரம் எழுவாய் பாப்பா
சீக்கிரம் எழுவாய் பாப்பா
சின்ன அவரைப் பாப்பா!

3. விழித்து விழித்துப் பார்க்கிருய்
நெளித்து நெளித்துக் கிளம்புகிருய்
வானம் பார்த்துச் சிரிக்கிருய்
சின்ன அவரைப் பாப்பா
சின்ன அவரைப் பாப்பா!

பயிற்சி

1. கொட்டாங்கச்சியில் மண்ணைப் போடு. அதில் இரண்டு அவரை விதைகளை நடு. தண்ணீர் விடு. அவரைப் பாப்பா வளர்வதைப் பார்.

2. **தெரிந்துகொள்:**
மழை சொட்டுச் சொட்டாய்ப் பெய்கிறது.
ஆடுமாடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.
பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கின்றன.
எறும்புகள் சாரை சாரையாய்ப் போகின்றன.
மனிதர்கள் கூட்டங் கூட்டமாய்ப் போகிருர்கள்.

32. கால நிலைமை

1. ஒவ்வொரு நாளும் கால நிலைமை ஒரே விதமாக இருக்கிறதா? சில நாளில் வெயிலும் உஷ்ணமும் அதிகம். சில நாள் காற்று பலமாக அடிக்கிறது. சில நாள் மழை பெய்கிறது. இன்னும் சில நாளில் பனியும் குளிரும் அதிகமாக இருக்கின்றன. இவ்விதம் சீதோஷ்ண நிலைமை மாறுபட்டே வருகிறது.

2. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் வெயிலும் உஷ்ணமும் அதிகம். அப்பொழுது **கோடைக்காலம்**. சித்திரை, வைகாசியில் வெயில் கடுமையாக இராது; தென்றல் வீசும்; மரஞ்செடிகள் தளிர்விட்டுப் பூக்கும். இந்த மாதங்களை **வசந்த காலம்** என்பார்கள். ஆனி, ஆடியில் வெயிலின் வெப்பம் தாங்க முடியாமல் அதிகமாக இருக்கும்; மேல்காற்று வீசும். அப்பொழுது உஷ்ணத்தைத் தணிக்கும்படியான வசதிகளை நாம் ஏற்படுத்திக்கொள்கிறோம். இந்த மாதங்களில் மா, பலா முதலிய பழவகை கிடைக்கும்.

3. ஆவணி முதல் கார்த்திகை வரையில் **மாரிக் காலம்**. இந்த மாதங்களில் மழை அதிகமாகப் பெய்யும்; வாடைக் காற்று வீசும்; ஆறு, குளங்களில் நீர் நிரம்பியிருக்கும்; பயிர் பச்சைகள் செழித்து வளரும். அக்காலத்தில் நாம் எல்லாரும் ஈரத்தில் நடமாடாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

4. மார்கழியும் தையும் **முன்பனிக் காலம்**; மாசியும் பங்குனியும் **பின்பனிக் காலம்**. முதல் இரண்டு

மாதங்களில் இரவுக்கு முன் மாலைப்பொழுதில் பனி அதிகம். பின் இரண்டு மாதங்களில் இரவுக்குப் பின் காலையில் பனி மிகுதி. இம்மாதங்களில் குளிர் அதிகம். ஆகையால், நாம் கம்பளிப் போர்வைகளை உபயோகிப்பது நல்லது. இந்த மாதங்களில் அறுவடை செய்து, தானியங்களைச் சேகரிக்கிறோம்.

வசந்த காலம், கோடைக் காலம், மாரிக் காலம், பனிக்காலம் இவைகள் வருஷா வருஷம் திரும்ப வரும். இவைகள் பருவ காலங்கள் எனப்படும். ஒவ்வொரு பருவ காலமும் ஒவ்வொரு விதத்தில் நன்மை விளைவிக்கிறது அல்லவா?

பயிற்சி

1. தெரிந்துகொள் :

உஷ்ணம் = சூடு. மாரி = மழை.
தென்றல் = தெற்கிலிருந்து வீசும் காற்று.
வாடை = வடக்கிலிருந்து வீசும் காற்று.

2. இச் சொற்களை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது:
ஒவ்வொரு, பயிர்பச்சை, உஷ்ணம், மாலைப்பொழுது, வசதி.

3. கேள்விகள் :

பருவ காலங்கள் எத்தனை? என்னென்ன?
மரஞ்செடிகள் எப்பொழுது தளிர்த்துப் பூக்கும்?

4. பிரித்து எழுது :

வாடைக்காற்று, மரஞ்செடி, சீதோஷ்ணம்.

33. நான் யார்?

1. கத்திபோல் இலை இருக்கும்
கதிர்போல் பூப் பூக்கும்
தின்னப் பழம் கொடுப்பேன்
தின்னாத காய் காய்ப்பேன். (வாழைமரம்)

2. நீ ஓடினால் நானும் ஓடுவேன்
நீ நின்றால் நானும் நிற்பேன்
காலை நீளுவேன், பகலில் குறைவேன்
மாலையில் மறுபடியும் நீளுவேன். (நிழல்)

3. நான் பிறந்தது முள் செடி;
ஆனால் ரோஜா இல்லை.
என் நிறம் மஞ்சள்;
ஆனால் செவ்வந்தி இல்லை.
மடலாக இருப்பேன்;
வாழைப் பூ இல்லை.
என் மணத்திற்கும் அழகுக்கும்
பெண்கள் என்னைச் சூட்டிக்கொள்வர்.
(தாழம்பூ)

4. பகலில் திரிவேன்
இரவில் மறைவேன்
கிழக்கில் உதிப்பேன்
உஷ்ணம் கொடுப்பேன். (சூரியன்)

34. ஆஜர்ப் பட்டி

	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
மணி	×	×	×	×	a
முத்து	×	×	a	×	×
ஜான்	a	a	×	×	×
லீலா	×	×	×	×	×
ஆமது	a	×	×	×	a

இது ஒரு வாரத்தில் வந்த பிள்ளைகளின் ஆஜர்ப் பட்டி.

× இந்த அடையாளம் பள்ளிக்கூடத்திற்கு வந்ததைக் குறிக்கும்.

a இந்த அடையாளம் வராததைக் குறிக்கும்.

ஆஜர்ப் பட்டியைப் பார்த்து, கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதில் எழுது. (3 நிமிஷத்திற்குள்)

1. எந்த நாள் எல்லாப் பிள்ளைகளும் ஆஜர்?
2. யார் எல்லாத் தினங்களிலும் ஆஜர்?
3. எவன் அதிக நாட்கள் வந்திருக்கிறன்—முத்துவா? ஆமதா?
4. ஜான் எந்த தினங்களில் ஆஜர் ஆகவில்லை?
5. புதன்கிழமை ஆஜர் ஆனவர்களின் பெயர்களை எழுது.



35. பார்த்து நட

உபாத்தியாயர் : பிள்ளைகளே! இன்று நீங்கள் வரும் வழியில் ஜனங்கள் கும்பலாக நின்றார்களே! கவனித்தீர்களா ?

இராமன் : எல்லோரும் பார்த்தோம். ஒரு மோட்டார் விபத்து, ஐயா.

உபாத்தியாயர் : கிருஷ்ணா, நீ விசாரித்தாயா? என்ன நேர்ந்தது ?

கிருஷ்ணன் : நானும் கூட்டத்திலிருந்து கவனித்தேன். மோட்டார் வண்டி ஒன்று வேகமாகச் சாலையில் வந்துகொண்டிருந்தது. அதைக் கவனிக்காமல் ஜயராஜ் என்னும் பத்து வயதுப் பையன் திடீரென்று ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குக் குறுக்காகப் பாய்ந்தோடினான். மோட்டார் ஓட்டுபவன் மோட்டாரை நிறுத்தமுடியாமல், அது அந்தப் பையன்மீது ஏறிவிட்டது. பையன் கூச்சலிட்டு அழுதான். ஜனங்கள் திடுக்கிட்டு ஓடி வந்தார்கள்.

உபாத்தியாயர் : மாணிக்கம்! பிறகு என்ன நேர்ந்தது, தெரியுமா ?

மாணிக்கம் :—எல்லோரும் மோட்டார் ஓட்டுபவனைக் குற்றஞ் சாட்டினார்கள். சிறுவர்கள் நடமாடும் தெருக்களில் வண்டியை மிகவும் வேகமாய் ஓட்டினது பிசகு என்று கோபித்தார்கள்.

உபாத்தியாயர் :—சரி; மோட்டார் ஓட்டினவன் என்ன சொன்னான்?

மாணிக்கம் :—"ஊதுகொம்பின் சத்தத்தைக் கவனிக்காமல் பையன் ஓடிவந்து மோட்டாரில் அகப்பட்டுக்கொண்டால் அது என் குற்றமாகுமா?" என்று சொன்னான்.

உபாத்தியாயர் :—இராமா! பிறகு என்ன நடந்தது?

இராமன் :—நல்ல வேளையாய் உயிர்ச்சேதமில்லை. பையனுடைய காலில் மட்டும் சிறிது காயம் பட்டது. உடனே அந்த மோட்டாரிலேயே அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

உபாத்தியாயர் :—இன்று ஏற்பட்ட விபத்திலிருந்து நீங்கள் எல்லோரும் ஒரு பாடம் அறிந்து கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில் சைக்கிள், மோட்டார் முதலிய பல வகை வண்டிகள் தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் அடிக்கடி ஓடிக்கொண்டிருக்கின்றன. சிறிது அஜாக்கிரதையாக இருந்தால் நமது உயிருக்கே ஆபத்து வரும்; அல்லது கால், கை முறிந்து வாழ்நாள் முழுவதும் நாம் கஷ்டப்பட நேரிடும். இவ்வித ஆபத்துக்களிலிருந்து உடலையும் உயிரையும் காப்பாற்றிக்

கொள்வது முதற் பாதுகாப்பு எனப்படும். பின் வரும் விதிகளை ஞாபகத்தில் வைத்து, அவைகளை நீங்கள் எப்பொழுதும் அநுசரிக்க வேண்டும்.

1. வண்டிகள் இடது ஓரமாகவும், நாம் வலது ஓரமாகவும் சாலையில் போவதுதான் ஒழுங்கு.

2. தெருக்களில் ஒருபுறத்திலிருந்து மற்றொரு புறம் குறுக்கே செல்லும்போது முன் பின் பார்த்தே ஜாக்கிரதையாகப் போகவேண்டும்.

3. நடு ரோட்டிலும், நடுத் தெருவிலும் நின்று பேசக்கூடாது; விளையாடக்கூடாது.

பிள்ளைகள் :—இன்று பார்த்த விபத்தை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். அது எங்களுக்கு ஒரு நல்ல எச்சரிக்கை.

பயிற்சி

I. 1. இந்தச் சம்பாஷணையைப் படித்து, நடித்துக் காட்டுங்கள். இதை நடித்துக் காட்ட எத்தனை பேர் வேண்டும்?
   2. இந்த மோட்டார் விபத்தில் குற்றம் யார் பேரில்?
   3. காயம் பட்ட ஐயராஜை என்ன செய்தார்கள்?

II. பூர்த்தி செய்:
   1. வண்டிகள் — ஓரமாகவும், நாம் — ஓரமாகவும் சாலையில் போவதுதான் ஒழுங்கு.
   2. தெருக்களில் குறுக்கே செல்லும்போது — பார்த்தே — போகவேண்டும்.

III. வாக்கியங்களில் உபயோகித்து எழுது:
எச்சரிக்கை, அஜாக்கிரதை, ஒழுங்கு, திடீரென்று.

36. சைக்கிள் வண்டி

1. தங்கையேபார் தங்கையேபார்
சைக்கிள்வண்டி இதுவேபார்.

2. சிங்கார மானவண்டி
சீமையிலே செய்தவண்டி.

3. இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும்வண்டி.

4. மாடில்லை குதிரையில்லை
மாயமதாய்ப் பறந்திடும்பார்.

5. தீயில்லை புகையுமில்லை
தீவிரமாய்ச் சென்றிடும்பார்.

6. காலாலே மிதிப்பதனல்
கடும்விசையில் போயிடும்பார்

7. ஒன்றன்பின் ஒன்ருக
உருளும்பை தாக்களேப்பார்.

8. அக்காளும் தங்கையும்போல்
அவைபோகும் அழகைப்பார்.

—ஸ்ரீ சி. தேசிகவிநாயகம் பிள்ளை

பயிற்சி

பைதா = சக்கரம்

1. நீ சைக்கிள் வண்டியைப் பார்த்திருக்கிருயா ?
2. உனக்கு சைக்கிள் விடத் தெரியுமா ?
3. சைக்கிள் ஓட என்ன செய்யவேண்டும் ?
4. தீயும் புகையும் உள்ள வண்டி எது?
5. <u>தங்கையே</u> பார். (எழுவாய்)

<u>அக்காளும் தங்கையும் போல்</u>

(எழுவாய் [illegible])

——கோடிட்ட வார்த்தைகளுக்கு வேறு சொற்கள் சொல்ல முடியுமா ?

37. பழைய பாடம் திருப்புதல்

(i) **வாக்கியம்:**—பல சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் என்று முந்திய பாடங்களில் அறிந்துகொண்டோம். வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி போடவேண்டும்.

இது வாக்கியமா ?—

முளைக்கும் பெய்தால் புல் மழை.

இதில் நான்கு சொற்கள் இருக்கின்றன. ஆனால் கருத்துப் புரியவில்லை. வரிசையை மாற்றி 'மழை பெய்தால் புல் முளைக்கும்', என்று எழுதினால் கருத்து விளங்குகிறதல்லவா ?

வாக்கியத்தில் சொற்கள் பொருள் விளங்கக் கூடிய வரிசையில் இருக்கவேண்டும்.

பயிற்சி I

பின்வரும் சொற்களைப் பொருள் தெரியும்படி வாக்கியமாக எழுது :

1. வளரும் தென்னை ஓங்கி மரம்.
2. ஆனாலும் கந்தை கட்டு கசக்கிக்.
3. தேன் திரியும் வண்டு உண்டு.
4. தோண்டி வாங்கினான் ஒருவன் ஆண்டி.

(ii) **சொற்கள்:**—முருகன் புத்தகம் வாங்கினான்.

இந்த வாக்கியத்தில் மூன்று சொற்கள் இருக்கின்றன.

முருகன் — ஒருவனின் பெயர்.

புத்தகம் — ஒரு பொருளின் பெயர்.

இவ்விதம் பெயரைக் குறிக்கும் சொற்கள் **பெயர்ச் சொற்கள்.**

வாங்கினான்—இது செய்கையைக் குறிக்கும் சொல். செயலை வினை என்றும் சொல்லலாம். இவ்விதம் செயலைக் குறிக்கும் சொற்கள் **வினைச் சொற்கள்.**

பயிற்சி II

பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்தெழுது :

1. மரத்தில் இலை, பூ, காய், கனி இருக்கின்றன.
2. ஐயா காலையில் எழுந்து வாசிப்பாள்.
3. நீ வா.
4. 73-ம் பக்கத்தில் கடைசிப் பாரவிலுள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

ஒருமை		பன்மை
ஒரு மரம்	—	இரண்டு மரங்கள்
ஒரு ஈ	—	ஐந்து ஈக்கள்

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் **ஒருமை எண்.** ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் பெயர் **பன்மை எண்.**

பயிற்சி III

1. தெரிந்துகொள் :—

ஒருமை		பன்மை
நான்	—	நாங்கள்
நீ	—	நீங்கள்
அவன், அவள்	—	அவர்கள்
அது	—	அவை, அவைகள்

2. பன்மைச் சொற்கள் எழுது :

பசு, பூ, புத்தகம், மரம்.

3. ஒருமைச் சொற்கள் எழுது :

மனிதர், சிறுவர், கைகள், பழங்கள், பற்கள்.

4. வினைச்சொற்களிலும் ஒருமை, பன்மை கவனிக்கவேண்டும்.

கீழே கொடுத்துள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பொருந்தும்படி பொறுக்கி வாக்கியமாக எழுது.

(உதாரணம்)

ஆடு	துள்ளுகின்றன
ஆடுகள்	துள்ளுகிறது

விடை:— ஆடு துள்ளுகிறது.
ஆடுகள் துள்ளுகின்றன.

செடி	நிற்கிறார்கள்
ஒரு பெண்	வருகிறாய்
அவன்	நிற்கிறாள்
பெண்கள்	வருகிறேன்
நீ	பயிராகிறது
நீங்கள்	வருகிறீர்கள்
நான்	நடக்கிறான்

(iii) எழுத்து :—

வாசுதேவன்—இது ஐந்து எழுத்துக்கள் சேர்ந்த ஒரு சொல்.

உனக்கு இதுவரை எத்தனை எழுத்துக்கள் தெரியும்? இப்பொழுது அவைகளை வரிசையாக எழுதத் தெரிந்துகொள்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ— இவை 12-ம் உயிர் எழுத்துக்கள்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இவை 18-ம் மெய் எழுத்துக்கள்.

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ—இவை உயிர்மெய் எழுத்துக்கள்.

இதே விதம் ஏற்படும் எல்லா எழுத்துக்களும் இப்புத்தகத்தின் அட்டைப் பக்கத்தில் அச்சிட்டிருப்பதைப் படித்துத் தெரிந்துகொள்.

எழுத்துக்கள் சேர்ந்து சொற்கள் ஆகும்.

சொற்கள் சேர்ந்து வாக்கியம் ஆகும்.

வாக்கியங்கள் சேர்ந்து பத்தி அல்லது பாரா ஆகும்.

பாராக்கள் சேர்ந்து பாடம் ஆகும்.

பயிற்சி

1. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ இந்த எழுத்துக்களில் ஆரம்பித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு வார்த்தை எழுது.

2. இந்தச் சொற்களின் முதல் எழுத்துக்கள் க ச ட த ந ப ம ய ர ல வ வரிசையில் வருமாறு எடுத்து எழுது:

டப்பி	சட்டி
லட்டு	ரதம்
பகல்	மண்
யார்	கல்
நண்டு	தங்கம்
வண்டி	

38. உல்லாசப் பிரயாணம்

சனிக்கிழமை பள்ளிக்கூடமில்லை. அன்று மத்தியானம் மூன்று மணிக்குக் கோபாலன், மாணிக்கம், முருகன், நடேசன் இவர்கள் நால்வரும் வீட்டில் சொல்லிக்கொண்டு கால்நடையாக உல்லாசப் பிரயாணம் புறப்பட்டார்கள்.

ஒரு மைல் தூரம் நடந்த பிறகு ஒரு சிறு கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அந்த ஊர், வயல்களும் தோப்புக்களும் சூழ்ந்து அழகாயிருந்தது. ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் எல்லாரும் இளைப்பாற உட்கார்ந்தார்கள்.

கோபாலன்:— அப்பாடா! வீட்டிலும் பள்ளிக் கூடத்திலும் அடைபட்டிருந்தது எவ்வளவு சோம்பலாயிருந்தது! இவ்விதம் உலாவுதல் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது?

மாணிக்கம்:- ஆமாம். இன்று வெயிலும் அதிமாக இல்லை. குளிர்ந்த காற்றும் சுகமாக வீசுகிறது.

முருகன்:- அதோ உயரப் பார்! இந்த ஆலமரத்தின் இலைகள் எவ்வளவு பெரியவையாகவும், பழங்கள் சிவப்பாகவும் இருக்கின்றன. இந்த மரத்தடியில் வெயிலே விழவில்லை. நீண்ட தூண்கள்போல் விழுதுகள் தொங்குகின்றன.

நடேசன்:—வண்டுகள் ரீங்காரம் செய்வதும், கிளிகள் கீச்சிடுவதும், காகம் கரைவதும், தூரத்தில் குயில் இனிமையாகக் கூவுவதும், மதகுகளில் தண்ணீர் 'சோ' என்று விழுவதும் கேட்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து பாட்டுக் கச்சேரி செய்வதுபோல இருக்கிறது.

கோபாலன்:— இளைப்பாறியது போதும்; எழுந்திருங்கள். இதோ ஜோடி ஜோடியாகத் தொங்கும் ஆலம் விழுதுகளின் நுனிகளை முடிந்து, அதில் உட்கார்ந்து ஊஞ்சலாடுவோம்.

மாணிக்கம்:—சரி, அது நல்ல விளையாட்டு. (எல்லாரும் சிறிது நேரம் ஊஞ்சல் ஆடுகிறார்கள்.)

முருகன்:—நடேசா! நான் இந்த மரத்தில் ஏறி இலை பறித்துப் போடுகிறேன். நீ அவைகளைப் பொறுக்கி, அடுக்கிக் கட்டு.

நடேசன்:- அதற்கென்ன, அப்படியே செய்கிறேன். இது நல்ல காரியம்தான். அம்மா சாப்பாட்டு இலைகளாக இவைகளைத் தைத்துப் போடுவாள்.

மாணிக்கம் :– கோபாலா! பல்பொடியைக் காட்டிலும் ஆலம் விழுது பல் தேய்க்க நல்லது என்று நமது உபாத்தியாயர் சொன்னரே. என் கத்தியைக் கொடு. விழுது நுனியிலிருந்து துண்டுகள் நறுக்கிக் கொண்டுபோவோம்.

இவ்விதம் ஒரு மணி நேரம் சென்ற பிறகு அவர்கள் கிராமத்தை நோக்கி நடந்தார்கள். வழியில் மடைகள் வழியாக வயல்களில் தண்ணீர் பாய்வதையும், நாற்றுக்கள் பசுமையாக வளர்ந் திருப்பதையும் கவனித்தார்கள்.

வாய்க்கால் ஒன்று குறுக்கிட்டது. கால்களைத் தண்ணீரில் தொங்கவிட்டுக்கொண்டு அதன் கரையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து நீரோட் டத்தைக் கவனித்தார்கள்.

கோபாலன்:– இதோ பாருங்கள் மீன்கள் துள்ளி எழும்புவதை!

நடேசன்:– அதோ ஒரு குடியானவன் ஏற்றத்தினல் தண்ணீர் இறைக்கிருன். வாருங்கள், அங்கே போய் வேடிக்கை பார்ப்போம். (எல்லாரும் தோட்டத்திற்குள் நுழைந் தார்கள்.)

ஒரு புறத்தில் ரோஜா, மல்லிகை முதலிய பூச்செடிகளும், நடுவில் கத்தரி, மிளகாய்ச் செடிகளும், வேலி ஓரங்களில் கொய்யா மரங்களும் பயிர்செய்யப்பட்டிருந்தன.

குடியானவன்:—பிள்ளைகளே! நீங்கள் யார்? எந்த ஊர்?

மாணிக்கம்:-நாங்கள் அடுத்த ஊர் தான். சும்மா ஊர் சுற்றிப் பார்க்க வந்தோம்.

குடியானவன்:—பாத்திகளை மிதிக்காதீர்கள்; செடிகளைச் சேதப்படுத்தக்கூடாது.

முருகன்:—நாங்கள் அப்படி ஒன்றும் செய்யமாட்டோம்; பயப்படவேண்டாம். நீங்கள் தண்ணீர் இறைத்துக்கொண்டிருங்கள். நான் மண்வெட்டியால் மடைகளைத் திறந்து பாத்திகளுக்கு நீர் பாய்ச்சுகிறேன்.

நடேசன்:—நான் தண்ணீர் விடாத பாத்திகளில் வளர்ந்துள்ள களைகளை எடுக்கிறேன்.

குடியானவன்:—அப்படியானால் சரி. ஜாக்கிரதையாகச் செய்யுங்கள். (எல்லாரும் வேலைசெய்கிறார்கள்.)

கோபாலன்:—நண்பர்களே! நேரமாகிவிட்டது. ஊருக்குத் திரும்பலாமா?

குடியானவன்:—குழந்தைகளே! சூரியன் சீக்கிரம் அஸ்தமித்துவிடும். இருட்டுவதற்கு முன் நீங்கள் வீடு போய்ச் சேரவேண்டும். புறப்படுங்கள்.

கோபாலன், மாணிக்கம், முருகன், நடேசன் நால்வரும் கை கால்களைக் கழுவிக்கொண்டு ஊருக்குக் கிளம்புகிறார்கள்.

குடியானவன்:—நீங்கள் நல்ல பிள்ளைகள். எனக்கு உதவிசெய்தீர்களல்லவா? கொய்யாப் பழங்கள் தருகிறேன். வீட்டுக்குக் கொண்டு போய்த் தின்னுங்கள்.

அவர்களும் பழங்களை வாங்கிக்கொண்டு அவனுக்கு வந்தனம் சொன்னார்கள். பிறகு ஒருவன் கொய்யாப் பழமும், ஒருவன் ஆலிலைக் கட்டும், ஒருவன் ஆலம் விழுதும் எடுத்துக் கொண்டார்கள். எல்லோரும் வேகமாக நடந்து இருட்டுவதற்கு முன்பு வீடு வந்து சேர்ந்தார்கள்.

39. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்.
5. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
8. நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
9. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
10. அடுத்தவரை யொருநாளும் கெடுக்கவேண்டாம்.
11. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
12. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
13. தனம்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்.
14. செய்தநன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.
15. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
16. மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.

40. ஆத்திசூடி

1. அறஞ் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. தந்தை தாய்ப் பேண்.
14. நன்றி மறவேல்.
15. பருவத்தே பயிர் செய்.
16. இளமையிற் கல்.
17. கேள்வி முயல்.
18. செய்வன திருந்தச் செய்.
19. நோய்க்கிடங் கொடேல்.
20. வித்தை விரும்பு.

Sri Mahabharatham Press, Kumbakonam. May 1949— C. 12,000.

உயிர்மெய் எழுத்துக்கள்

மெய்						உயிர் 12						
18	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

RE,B/279